விலை ரூபா: 5.00

பக்கங்கள்:-எட்டு

Registered as a News paper in Sri Lanka

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# வலம்புரி
# VALAMPURI

மங்கையர் மனம் கொள்ளை கொள்ளும் தங்க நகைகளுக்கு



சாரங்கா நகை மாடம்

177/4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:- 2480

சங்கு - 03 | வள்ளுவர் ஆண்டு 2033 | ஆடி 10 | வெள்ளிக்கிழமை (26.07.2002) | தொலைபேசி 3378 | ஒலி 219

## முகமாலையில் நேற்று பயங்கரம்

# புலிகள் மீது இராணுவச் சிப்பாய் திடீர் துப்பாக்கிப் பிரயோகம்

### பதில் தாக்குதலில் சிப்பாய் பலி

(பாதுகாப்பு செய்தியாளர்)

**முகமாலை சோதனைச் சாவடியில் இருந்து விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் ஆயுதத்துடன் புகுந்த இராணுவச்சிப்பாய் ஒருவர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தின்போது இரண்டு விடுதலைப்புலி உறுப்பினர்கள் காயமடைந்துள்ளனர். தற்பாதுகாப்பின் நிமித்தம் விடுதலைப்புலிகள் சுட்டதில் அந்த இராணுவச் சிப்பாய் கொல்லப்பட்டதாக சர்வதேச கண்காணிப்புக்குழு நேற்று இரவு விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.**

முகமாலை இராணுவச் சோதனைச் சாவடியில் நின்றிருந்த இராணுவச்சிப்பாய் ஒருவர் நேற்று ஆயுதங்களுடன் விடுதலைப் புலிகளின் பிரதேசத்துக்குள் ஊடுருவி அங்கு நின்றிருந்த 4 விடுதலைப் புலிகளை நோக்கி காரணம் எதுவும் இன்றி துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது இரண்டு விடுதலைப்புலி உறுப்பினர்கள் காயமடைந்துள்ளனர்.

நேற்று நண்பகல் 12 மணிக்கும் 1மணிக்கும் இடையில் இடம்பெற்ற இத்துப்பாக்கிச் சூட்டை அடுத்து விடுதலைப்புலிகள் தற்பாதுகாப்பிற்காக திருப்பிச் சுட்டபோது அந்த இராணுவச் சிப்பாய் உயிரிழந்துள்ளார்.

(08ம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு எம்.பிகள் நாளை பிரபாவை சந்திப்பர்

(வவுனியா)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் நாளை சனிக்கிழமை சந்திக்கவுள்ளார்.

இது தொடர்பான அழைப்பு கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஏற்கனவே விடுக்கப்பட்டிருந்தது.

கிளிநொச்சியில் உள்ள விடுதலைப்புலிகளின் நடுவப்பணியகத்தில் நடைபெறவுள்ள இச்சந்திப்பின போது புரிந்துணர்வு உடன் படிக்கை

(08ம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் இம்தியாசுக்கு ஜனாதிபதி அழைப்பு

(கொழும்பு)

ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாரக்கரை உத்தியோகபூர்வ விஜயம் குறித்து பேச வருமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தொலைபேசி மூலம் அழைப்பு விடுத்துள்ளார்.

பொலநறுவையில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக் கூட்டத்தில் ஜனாதிபதி அமைச்சர்கள் சிலரைக் கேலி செய்யும் வகையில் நடித்துக் காண்பித்து உரைநிகழ்த்தியிருந்தார்.

இதனை அரச தொலைக்காட்சி இரு தடவைகள் ஒளிபரப்பியிருந்தது.

(08ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி சந்திரிகா தனது கல்விச் சான்றிதழை பகிரங்கப்படுத்துவாரா?

### அமைச்சர் கருணாநாயக்க கேள்வி

(இஸ்லாமாபாத்)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தனக்கெதிரான தேவையற்ற குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருகிறார். கௌரவமான குடும்பத்தில் பிறந்து உயர் கல்வியை முறையாகக் கற்று சான்றிதழ் பெற்றுள்ளேன். எனது கல்விச் சான்றிதழை நான் பகிரங்கமாக காட்டத் தயாராக உள்ளேன்.

அதேபோல் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தனது கல்விச் சான்றிதழை பகிரங்கமாகக் காட்டுவாரா? என்று அமைச்சர் ரவி கருணாநாயக்க பாகிஸ்தானில் இருந்து கேட்டுள்ளார்.

ஜனாதிபதியின் கைப்பை விவகாரம் சூடுபிடித்து வரும் இவ்வேளை

(08ம் பக்கம் பார்க்க)

## சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

### எதிர்க் கட்சிகள் தயாராகின்றன

(கொழும்பு)

பாராளுமன்ற சபாநாயகர்

பாராளுமன்றில் நேற்று முன் தினம் இடம் பெற்ற அடிதடி கைகக

## எதிராக கட்சிகள் தயாராகின்றன

(கொழும்பு)

பாராளுமன்ற சபாநாயகர் யோசப் மைக்கல் பெரேராவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவதற்கு, பொது ஜன ஐக்கிய முன்னணி தயாராகி வருகின்றது.

பாராளுமன்றில நேற்று முன் தினம் இடம் பெற்ற அடிதடி கைகலப்பை அடிப்படையாக வைத்தே, சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவதற்கு, பொதுஜன ஐக்கிய முன்ன

(08ம் பக்கம் பார்க்க)

தனக்கெதிரான தேவையற்ற குற்றச் சாட்டுக்களை சுமத்தி வருகிறார். கௌரவமான குடும்பத்தில் பிறந்து உயர் கல்வியை முறையாகக் கற்று

அதேபோல் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தனது கல்விச் சான்றிதழை பகிரங்கமாகக் காட்டுவாரா?

ஜனாதிபதியின் கைப்பை விவகாரம் சூடுபிடித்து வரும் இவ்வேளை

(08ம் பக்கம் பார்க்க)

# தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஒரு மாதத்திற்குள் விடுதலை

## பாதுகாப்பு அமைச்சர் உறுதி

(நமது நிருபர்)

**பாலியல் குற்றச சாட்டுகள் சுமத்தப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளைத் தவிர ஏனைய அரசியல் கைதிகளை விரைவில் விடுதலைசெய்வதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களிடம் நேற்று உறுதியளித்துள்ளார்.**

நாட்டில் உள்ள சிறைச் சாலைகளில் நீண்ட காலமாக விசாரணையின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுடன் தமிழ்த் தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுப் பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

இப்பேச்சுவார்த்தையின் போது சட்டமா அதிபர் கே.சி.கமலசபேசனும் பிரசன்னமாகியிருந்தார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எம்.பிக்களான யோசப்பரராஜசிங்கம், வி.ஆனந்தசங்கரி, அ.விநாயகமூர்த்தி, ஜி.ஜி.கஜேந்திரகுமார், என்.ரவிராஜ், இரா.சம்மந்தன், என்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் உட்பட ரெலோ அமைப்பின் தலைவர் என்.சிறிகாந்தாவும் கலந்து கொண

(08ம் பக்கம் பார்க்க)

## கடற்றொழிலுக்குச் செல்ல மீனவர் அ.அட்டை அவசியம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டு கடற்றொழிலாளர்கள் மீனவர் அடையாள அட்டை வைத்திருக்க வேண்டும் என்று பாதுகாப்புப் படையினர் அறிவித்துள்ளனர்.

தொழிலாளர்கள் கடலுக்குச் செல்லும்போது, இவ் அடையாள அட்டை வைத்திருந்தாலே மீன் பிடிக்க அனுமதிக்கப்படுவாரெனறு தெரிவிக்கப்படுகிறது.

கடற்றொழிலாளர்களுக்கான பாஸ நடைமுறை நீக்கப்பட்டதை

(08ம் பக்கம் பார்க்க)

## பாராளுமன்றத்தில் கைகலப்பு ஆராய விசாரணைக் குழு

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் இடம் பெற்ற கைகலப்புத் தொடர்பாக ஆராய்வதற்கு விசாரணைக் குழு ஒன்றை நியமிக்கவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் செனரத்கப்பு கொட்டுவ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் .மாநாட்டிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்.

பாராளுமன்றத்தில் ஒழுக்கக் கேடான முறையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் எவராவது நடந்து

(08ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

சிறு விளம்பரம்

**உடன் தேவை**

மண்டைதீவில் உள்ள சைவ ஆலயம் ஒன்றிற்கு நித்திய பூஜைசெய்வதற்கு அந்தணர் ஒருவர் உடன்தேவை குடும்பமாக தங்குவதற்கு வீட்டுவசதியும் செய்து கொடுக்கப்படும். சம்பளம் நேரில்பேசி முடிவெடுக்கப்படும் விபரங்கட்கு மே.பா-வலம்புரி இல15 வெள்ளாந்தெரு யாழ்ப்பாணம். (C 4759)


# கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலயக் கல்விப் பணிப்பாளர்கள் கோட்டக் கல்வி அதிகாரிகள் நிர்வாக உத்தியோகத்தர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், கணக்காளர்கள், நிதி உதவியாளர்கள் ஆகியோர்களுக்கான கூட்டம் எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 30 மணிக்கு யாழ்.வலயக் கல்விப் பணிமனையின் மூகாமைத்துவ மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாக மேலதிகமாகாணக் கல்விப் பணிப்பாளர் சி. எஸ் சிவராஜா அறிவித்துள்ளார். (உ-19)

# பாடசாலைகளிலிருந்து இராணுவம் முற்றாக வெளியேற வேண்டும்

## தமிழீழ மாணவர் ஒன்றியம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

கல்வி மாணவர்களின்பிறப்புரிமை! எனவே பாடசாலைகளை ராணுவமுகாம்களாக்கும் செயல் மாணவர்களின் பிறப்புரிமையைமறுக்கும் செயலாகும். ஒருநாட்டின் மானிட அபிவிருத்தியில் கல்வி முக்கிய இடத்தை பெறுகிறது. எனவே கல்வி உரிமையை மறுப்பது மானிட அபிவிருத்தியை மறுப்பதற்கு சமனாகும்.

இவ்வாறு தமிழீழ மாணவர் ஒன்றியம் நேற்றுவிடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது. அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

புரிந்துணர்வு உடன்படிக்கையின் சரத்து 02 இயல்பு நிலையை மீளக்கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை பற்றிக்குறிப்பிடுகிறது. அச்சரத்தின் 3வது உபபிரிவு ஏதேனும் ஒருதரப்பினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் பாடசாலைக் கட்டிடங்கள் இந்த ஒப்பந்த நடைமுறைக்கு வருகின்ற நாளிலிருந்து விடுவிக்கப்படத் தொடங்கி அவற்றுக்குரிய பாவனைக்கு மீளக்கையளிக்கப்பட வேண்டும். இந்த நடவடிக்கை ஒப்பந்தம் நடைமுறைக்கு வருகின்ற நாளிலிருந்து 160 நாட்களுள் முற்றுப்பெற வேண்டும் எனக்குறிப்பிடுகின்றது. இதன்பிரகாரம் ஆகஸ்ட் மாதம் 2ம் திகதிக்கு முன்பாக அனைத்துப் பாடசாலைகளிலிருந்தும் இராணுவம் வெளியேற வேண்டும். அவ்வாறில்லையெனின் இயல்புநிலையை மீளக்கொணர்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசுமறுக்கின்றதென்பதே பொருளாகும்.

சிலபாடசாலைக் கட்டிடங்களிலிருந்து வெளியேறிய இராணுவத்தினர் அப்பாடசாலைக்கருகிலுள்ள காணிகளில், கட்டிடங்களில் முகாம்களை அமைத்து வருகின்றனர். கல்விக்குக் கட்டிடங்கள் மட்டும் போதாது. கற்பதற்கும், கற்பிப்பதற்கும், புறச்சூழல்களும் சாதகமாக அமையவேண்டியது அவசியமாகும். இராணுவ முகாம்களுக்கும் காவலரண்களுக்கும் மத்தியிலிருந்துகொண்டு கற்கமுடியுமா? கற்பிக்கத்தான் முடியுமா?

பாடசாலைக் கட்டிடங்களிலிருந்து வெளியேறினால் எங்கே செல்வது என்று இராணுவம் கேட்பது வேடிக்கையானது இந்தவினாவை அரசாங்கத்திடம் கேட்கட்டும்! அரசாங்கம் பதில்கூறட்டும். எம்மிடம் மாணவர்களிடம் இந்தவினாவைத்தெடுத்தால் எமதுபதில் தெளிவானது எங்கிருந்துவந்தீர்களோ அங்கேயே சென்றுவிடுங்கள் ஏ9பாதையும் திறந்துவிட்டுள்ளது மாணவர்களாகிய நாம் முன்பு எங்கிருந்தோமோ அங்கேயே குடியிருக்க விரும்புகிறோம் எங்கு கல்விகற்றோமோ அங்கேயே கல்விகற்க விரும்புகிறோம்- புரிந்துணர்வு உடன்படிக்கையின் கீழ் இயல்புநிலையை மீளக்கொணருதலாக இதனையே கருதுகிறோம்

குறிப்பிட்ட காலத்திற்குள் பாடசாலைக் கட்டடங்களிலிருந்து இராணுவத்தை வெளியேற்றி இயல்பு நிலையை தோற்றிவித்தல் என்றவிடயத்தில் அரசாங்கம் காட்டும் அலட்சியம் எம்மத்தியில் மிகுந்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது- இச்சிறிய விடயத்தைகூட நிறைவேற்றாமல் இழுத்தடிக்கின்ற இராணுவம் தமிழ்மக்களின் அடிப்படை பிரச்சினைகளை எவ்வாறு தீர்க்கப்போகின்றதென்பதே எமதுசந்தேகமாகும்-

# தவறாது சந்திக்கவும்

(யாழ்ப்பாணம்)

ஆங்கிலத்தின குழுப் பாடல், நாடகம் ஆகிய போட்டிகளில் பங்குபற்றும் பாடசாலைகளின் ஆங்கிலப் பொறுப்பாசிரியர்களை 29 ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப. 1.30 மணிக்கு ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளரை யாழ். கல்வி வலயத்தில் தவறாது சந்திக்குமாறு யாழ். கல்வி வலயப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (உ-3)

# சதுரங்கப் போட்டியும் பரிசளிப்பு விழாவும்

யாழ் ஹற்றன் நஷனல் வங்கியின் ஆதரவுடன் யாழ் இந்துக்கல்லூரி சதுரங்க கழகம் கடந்த யூன்22,24ம்திகதிகளில் நடத்திய 9வதுசதுரங்க சுற்றுப்போட்டியில் ஆண்கள் அணிகளில் யாழ்இந்து 9வது தடவையும் முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்டது மகாஜனா 2ம் இடத்தைப் பெற்றது. பெண்கள்அணியில் மகாஜனா முதலாமிடத்தையும் வேம்படி மகளிர்கல்லூரி 2ம்இடத்தையும் பெற்றன. ஆரம்பப்பிரிவு போட்டிகளில் யாழ்இந்து, யாழ்இந்துஆரம்ப பாடசாலை யாழ் வேம்படி மகளிர் முன்னணியில் திகழ்ந்தன.

போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்புவிழா நாளை சனிக்கிழமை காலை10.00மணிக்கு யாழ்இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும் பிரதமவிருந்தினராக வரையறுக்கப்பட்ட வடகடல் நிறுவன பிரதி பொதுமுகாமையாளர் ச.குகராஜன் கலந்துகொள்வார் பரிசில்களைதிருமதி உஷாகுகராஜன் வழங்குவார்

சதுரங்கப்யோட்டி முடிவுகள் வருமாறு

பாடசாலைஅணிமுடிவுகள்

16வயதுக்குமேல்: ஆண்

1ம் இடம் யாழ். இந்து, 2ம் இடம் மகாஜனா.

16வயதுக்குகீழ்: ஆண்

1ம் இடம் யாழ் இந்து, 2ம் இடம் மகாஜனா'

16வயதுக்கு மேல்பெண்

1ம்இடம் மகாஜனா 2ம் இடம் வேம்படிமகளிர்

16வயதுக்குகீழ்- பெண்

1ம் இடம் மகாஜனா 2ம் இடம் வேம்படிமளிர்

தனிநபர்முடிவுகள்

14வயதுக்குகீழ் ஆண்

1ம் இடம் எஸ்.கோபிகணேஸ் யாழ் இந்து, 2ம் இடம் எம்.பிரதீபன் யாழ் இந்து.

14வயதுக்குகீழ் பெண்

1ம் இடம் ஆர்.தர்ஷனா வேம்படி மகளிர், 2ம் இடம் பி.கஜானி வேம்படி மகளிர்.

12வயதுக்குகீழ் ஆண்

1ம் இடம் எஸ்.அபயன் யாழ்.இந்து, 2ம் இடம் எஸ். உத்தமகுமாரன் யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.

12வயதுக்குகீழ்பெண்

1ம் இடம் என். கௌசிகா யாழ். இந்து ஆரம்ப பாடசாலை,2ம் இடம் கே.ராம்யா வேம்படி மகளிர், ஆர். கௌஷா வேம்படி மகளிர்.

பலகைப்பரிசில்(Board Prizes)

ஆர்.நிஹாஸ் ஹாட்லி, யே. திவாகரன் யாழ்.மத்திய கல்லூரி, எ.சுபாங்கி மெதடிஸ்த மகளிர், ரி.அச்சுதன் ஹாட்லி, எஸ்.றொனி அனபாயன் சென் ஹென்றிஸ், எஸ். விஷ்ணுகாந்தன் ஹாட்லி, எஸ்.செந்தூரன் சென் ஹென்றிஸ், எஸ்.மீரா மெதடிஸ்த மகளிர், ஏ.யூட் மரினா திருக்குடும்பகன்னியர்மடம்

இப்போட்டிகளில் 12பாடசாலைகளைச் சேர்ந்த27 அணிகளும் 101தனிநபர்களும் பங்குபற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந)

## இறுதிப் போட்டியும பரிசளிப்பும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தயாநகைப் பூங்காவின் அனுசரணையுடன் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி150 ஆவது ஆண்டு நிறைவுவிழாச்சபை நடத்தும் கிறிக்கெற் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியும் பரிசளிப்புவிழாவும் இன்று பி.ப 1மணிக்கு கல்லூரிமைதானத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரிஅதிபர் ந. சிவகாடாட்சம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் தயாநகைப்பூங்கா உரிமையாளர் செ.தயானந்தன் பிரதம விருந்தினராகவும் கல்லூரிப் பழைய மாணவர்களான ஜீ. எஸ். ஸ்கொட்ஸ் எம். செல்வராஜா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.

இன்றைய இறுதிப்போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியை எதிர்த்து மானிப்பாய் இந்துக்கல்லூரி அணியும் நல்லூர் சீகொக்ஸ்விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கல்வியங்காடு நொதெண் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (இ)


யாழ்ப்பாணம் - மாநகரசபை

நல்லூர் ஸ்ரீகந்தசுவாமி கோயில்

மஹோற்சவகால தற்காலிக கடைகளை

குத்தகைக்கு வழங்குவதற்கான

**கேள்வி அறிவித்தல் 2002**

1. நல்லூர் இந்து விடுதிக்கு மேற்குப்பக்கமாகவும், தெற்குப்பக்கமாகவும்,
2. பண்டாரமாளிகை வளவில் மாநகரசபை அலுவலகத்திற்கு மேற்குப்பக்கமாகவும், கிழக்குப்பக்கமாகவும், பருத்தித்துறை வீதியில் இருமருங்கிலும்.

கச்சான் கடலைக் கடைகள், மணிக்காப்புக் கடைகள், ஐஸ்கிறீம் கடை / வாகன நிலையங்கள், இனிப்புக்கடைகள், இதர கடைகள் மற்றும் துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையம் ஆகியவற்றை அமைப்பதற்கான நிலங்களைக் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் எதிர்வரும் 07.08.2002ந் திகதி புதன்கிழமை பிற்பகல் 12.30 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். இதற்கான கேள்விப்படிவங்களை மீளளிக்கப்பட முடியாத படிவக்கட்டணம் ரூபா 281.25 மும் (ஜிஎஸ்ரி உட்பட) மீளளிக்கப்படக்கூடிய கேள்விப் பிணைப்பணமாக ஐஸ்கிறீம் கடைகளிற்கு ரூபா 100000.0வும், ஏனைய கடைகளுக்கு ரூபா 1000.00வும் செலுத்துவதன் பேரில் எதிர்வரும 06.08.2002ந் திகதி செவ்வாய்க்கிழமை பி ப 3.00 மணிவரையும் யாழ். மாநகரசபையின் நானாவித இறைவரிக்கிளையில் பெற்றுக்கொள்ள முடியும்.

பூர்த்திசெய்யப்பட்ட கேள்விகளை அரக்கு முத்திரையிடப்பட்ட கடிதஉறையிலிட்டு இடது பக்கமேல் மூலையில் வியாபாரத்தின் தன்மை குறிப்பிடப்பட்டு எதிர்வரும் 07.08.2002ந் திகதி பி.ப 12.30 மணிகு முன அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். அல்லது மாநகர ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் என முகவரியிட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். தபாலில் அனுப்பும் போது ஏற்படும் தாமதங்களுக்கு மாநகரசபைபொறுப்பேற்கமாட்டாது.

கிடைக்கப்பெற்ற கேள்விகள் யாவும் 07.08.2002ந் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு திறந்து பரிசீலிக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரர் அல்லது அவரது பிரதிநிதி எவரேனும் பிரசன்னமாக இருக்கலாம்;

மேலதிக விபரங்களை மாநகரசபையின் நானாவித இறைவரிக் கிளையில் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்வதுடன் கடைகள் அமையவுள்ள வரைபடத்தையும் நேரில் பார்வையிடலாம்.

குறிப்பு:- மேற்படி சபையால் வழங்கப்படும் தற்காலிக கடைகளைத் தவிர 12.08.2002ந் திகதிக்கு முன் விண்ணப்பித்து அனுமதி பெற்றிராத எந்தத் தற்காலிக வியாபாரமும் திருவிழாக் காலத்தில் நடாத்த அனுமதிக்கப்படமாட்டாது.

இ இராமலிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை,
யாழ்ப்பாணம்.
2002.07.24

(கி-4756)



வலிகாமம் தெற்குபிரதேசசபை சுன்னாகம்

வேலைகளுக்கான

**கேள்வி அறிவித்தல்**

வலிகாமம்தெற்குபிரதேசசபையில் 2002ம்ஆண்டுக்கு வேலைகளுக்கான ஒப்பந்தகாரராகப் பதிவு செய்தவர்களிடமிருந்து வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன. வேலைவிபரம்,கேள்வி விண்ணப்பப்படிவம் என்பவற்றை கீழ்க் குறிப்பிட்டவாறு அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

01. கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி:- 26.07.2002- 02.08.2002

02. கேள்விப்பத்திரம்ஏற்றுக்கொள்ளப்படும்கடைசித் திகதி;- 06.08.2002 ந.ப.12மணிவரை

03. கேள்விப்பத்திரம் திறந்துபார்க்கப்படும் திகதி;- 07.08.2002 பி.ப.3.00மணி

க.கமலசேகரன்,ஜே.பி.யு.எம்,
தலைவர்.
வலிதெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.

வலிகாமம்தெற்குபிரதேசசபை
சுன்னாகம்,
2002.07.25

(கி 478)
5

# காதன் மனையாளைப் பிரிதல் கடுந்துயராயினும்

# பொருள்வயிற் பிரிவு அன்றும் இன்றும் உள்ளதே

கலாநிதி

## குகஸ்ரீ க. சொக்கலிங்கம்

(சொக்கன்)

எல்லாமும் எல்லார்க்கும் பொது என்றிருந்த காலம் மாறி, மனிதன் தனக்கென உடைமைகளைப் பேணத் தொடங்கிய காலம்தொட்டு, அவன் தனது ஊரை உற்றார் உறவினரைப் பிரிந்து பொருள் தேடிப் பிற ஊருக்கோ, பிற நாட்டிற்கோ செல்வது, பெரும்பாலும் இயல்பான ஒன்றாகி விட்டது. தன்னைச் சூழ்ந்திருக்கும் தரைப்பகுதிகளை ஆட்சிப் படுத்திய போது அவன் தரைவழியாகப் பயணங்களை மேற்கொண்டு பிரிந்து சென்றான். காலப்போக்கில் கடலையும் வானையும் மேலாண்மைகொண்டவேளையில் கடல் வழிப் பயணத்தாலும் வான் வழிப் பயணத்தாலும் பிரிவுகள் நிகழ்ந்தன. தமிழராகிய நாம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தரை, கடல் ஆகிய இருவகைப் பிரிவுகளையும் மேற்கொண்டமைக்குத் தொல்காப்பியம் என்ற பழந்தமிழிலக்கண நூலும் (தொல்காப்பியம் பொருளதிகாரம், அகத்திணையியல், 25-34), சங்ககால இலக்கியங்கள் எனக் கொள்ளப்படுவனவற்றுள், அகத்திணை (காதல் ஒழுக்கம்) சார்ந்த பாடல்களிற் பலவும் சான்றுகளாய் உள்ளன.

பலவகைப் பிரிவு

ஓதற்பிரிவு, தூதுப்பிரிவு, பகைவயிற்பிரிவு (மன்னன் பகை நாடுகள் மேற் படை எடுத்துச் செல்லல்) என்ற மூவகைப் பிரிவுகளையும் முதன்மைப்படுத்தி, இவை அந்தணர், அரசர் போன்றாருக்கே உரிமையானவை என வலியுறுத்தி, அரசரைச் சார்ந்திருக்கும். வேளாளர் போன்றோரும் அரசர்களின் பணிப்பினை ஏற்று இப்பிரிவுகளை மேற்கொள்ளலாம் என்றுரைத்துவணிகருக்குபொருள் வயிற்பிரிவு உரித்தெனப் பாகுபடுத்திக் காட்டி, எனினும் மேற்குறித்த நால்வகையாரும பொருள் வயிற்பிரிவிற்கு உரியர் என்று வரையறுத்துத் தொல்காப்பியம் கூறியுள்ளவை இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கன. ஆரியமயப்பட்ட வருணப்பிரிவுகளின் அடிப்படையிலே அக்காலப் பிரிவுகளைத் தொல்காப்பியர் வகுத்தாரா, அல்லது அவருக்குப் பின் வந்த உரையாசிரியர்கள் தங்காலக் கருத்துக்

நெய்தல், மருதம், பாலை ஆகிய திணைத் தலைமைப் பாட்டுக் குரியனவான பெயர்கள் கொண்டே (வெற்பன், பொருப்பன், துறைவன், மீளி, கொடிச்சி, வள்ளி) அழைக்கப்படுவதும், வருணப் பாகுபாட்டிற்குரிய பெயர்களும் பிறவும் அவர்களுக்கு வழங்காமையும் கொண்டு அப்பாடல்கள் சாதிப் பிரிவினையில் அடிப்படையிலே எழுந்தவையல்ல என்பது கருத்திற் கொள்ளப்பட வேண்டியதாகும்.

ஓதல், தூது, பகை வயிற் பிரிவுகள் கலாசார, அரசியல் சார்ந்தவையேயாயினும் இவற்றில் பங்குகொண்டோர் நாட்டு மக்களிலே பெரும்பாலான தலைமைப் பாடுடையோர் என்று கொள்வது பொருத்தமேயாயினும், பொருள் வயிற் பிரிவு என்பது யாவர்க்கும் பொதுவானதே. இதற்குப் பொருளாதாரத் தேவைகள் அடிப்படைக் காரணிகள் என்பதையும் மறுத்தற்கில்லை.

பொற் காலம்

சங்க காலத்துக்குப் பின்னர் தோன்றிய திருக்குறள், இலட்சிய நாடு ஒன்று எவ்வாறிருத்தல் வேண்டும் என்பதற்குப் பின்வருமாறு வரைவிலக்கணம் கூறுகின்றது.

நாடென்ப நாடா<br>
வளத்தன நாடல்ல<br>
நாட வளந்தரும் நாடு.<br>
(திருக்குறள்-739)

தம்மிடத்தே வாழ்பவர் தேடி வருந்தாத அளவிற்கு வளத்தைத் தருவனவே நாடுகள் எனத்தக்கன என்பர் சான்றோர் தேடி வருந்திச் செல்வம் பெறவேண்டிய நாடுகள், நாடுகள் அல்ல'' (காடுகள்) என்பதே இக்குறளின் பொருளாகும்.

சங்க காலம் பொற் காலம் என்றும் அக்காலத்தில் வாழ்ந்தோர் யாவரும் நாடிப் பெறாது தாமே வளந்தரும் நாட்டுச் செல்வத்தைத் துய்த்தோர் என்றும் ஒரு மாயத் திரையினை நாம் நெடுங்காலமாய் இட்டு வருகின்றோம்.

மரம் நாடும் பறவைகள் போல அலைந்த புலவர்கள் பாணர் ஆகியோர் அக்கால வறுமையையும், பொருளாதார அசமத்துவத்தையும் தங்கள் பாடல்கள் மூலம் படம் பிடித்துக் காட்டத்தவறவில்லை. 'ஈதல் இசைபட வாழ்தல்' என்ற குறிக்கோள் எட்ட முடியாத, எட்ட முயன்ற ஓர் இலட்சியமாகவே அக்காலத்தில் இருந்தது. பெரும்பாணாற்றுப் படை, முதலாம் ஆற்றுப்படை நூல்கள், மருதநிலம் தவிர்ந்த மற்றைய நிலங்களிலே நிலவிய வறுமையின் கொடுமைகளை உள்ளது உள்ளவாறு சித்திரிப்பதும் இவ்விடத்தில் நினைவு கூரத்தக்கதே.

'பாலைக்கு நிலம் இல்லை' என்பர். குறிஞ்சியாகிய மலை சார்ந்த நிலமும், முல்லையாகிய காடுசார்ந்த நிலமும் மழையில்லாக் காலத்தில் வறண்டு வெறும் பாழாகக் காட்சிதருவதே பாலை. முன்பு மலைவளமும், வனவளமும் நிறைந்திருந்து அவை மழையின்மையால் பாழாக, மக்கள குடியெழும்பிப் பிறநிலங்களை நாடிச்செல்வதும், பாலையில் ஆறலைகள்வரே, பொருள் வயிற் பிரிந்து வருவோரைக் கொன்றும் கொள்ளை கொண்டும் வருத்துவதும் இயல்பான நிகழ்வுகளாகப் பாலைப் பாடல்களிலே பவனிவரக்காண்கின்றோம். தமிழகத்தின் பொருளாதாரச் சீர்கேட்டிற்குக் குறியீடாகப் (Symbol) பாலை என்ற சொல் கையாளப்பட்டதோ என்று சொல்லத் தோன்றுகின்றது.

வீரயுகம்

சங்ககாலத்தை 'வீரயுகம்' எனப் பேராசிரியர் க.கைலாசபதி கொள்வர். வீரயுககாலத்திலே போர்கள், பெரும்பாலும் ஒரே இனத்தவரிடையே (தமிழர்) உள்நாட்டிலேயே நடந்தவை, மண்ணாசை, புகழ்வேட்கை மானஉணர்வு, (மாண்புடை மானம் + மாண் பிறந்த மானம்), என்பவற்றால் நிகழ்ந்தனவே? இவற்றால்

டவை தமிழ்நாட்டின் பிரதேசங்கள்தாம். இக்காலத்தில் எழுந்த ஒழுக்கக்கேடுகள், சமூகச் சிக்கல்கள் என்பவற்றினைப் பிணிகளாகக் கொண்டு அறப்போதனையாகிய மருந்தினை வழங்கிய காலமாகச் சங்கமருவியகாலம் கொள்ளப்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

சங்கப்பாடல்களிலே நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, ஐங்குறுநூறு, கலித்தொகை ஆகிய தொகை நூல்களும் பட்டினப்பாலை, குறிஞ்சிப்பாட்டு, முல்லைப்பாட்டு ஆகிய தனிப் பாட்டுக்களும் அகத்திணையைப் பாடுபொருளாகக் கொண்டவை. இவற்றுள் பாலைத் திணையின் பிரிவுச் செய்திகள் அதிகம் அதிகமாக வருகின்றன. அவற்றுள்ளும் அகநானூறு என்ற நூலின் இருநூறு பாடல்கள் (அரைவாசிப் பாடல்கள்) பாலையையே பலபடப் பாடுகின்றன. பாலைத் திணையை அதன் சோகத்தையெல்லாம் நெஞ்சைத் தொட்டு நெகிழ வைக்கும் வகையில் பாடியவர் பெருங்கடுங்கோ என்ற அரசர். இச்சிறப்பினால் அவருக்குப் 'பாலை பாடிய (பெருங்கடுங்கோ') என்ற சிறப்படையும் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

காதன் மனையாளைப் பிரிதல்

உற்றார், உறவினர், நண்பர், ஊரார் என்ற பலரையும் பிரிந்து செல்வது மிக்க துயர் தரும் ஒன்றே. எனினும் காதன் மனையாளை, வாழ்விலும் தாழ்விலும் துணை நிற்கப்போகும் பங்காளியைப் பிரிவதென்பது ஆற்றொணாத் துயர் தருவதே. அதுவும் பிரிந்து செல்லும் பாலை வழியின் இயற்கையான வெப்பக் கொடுமையும், வழிபறிக் கள்வராற் (ஆறலை கள்வர்) கொலை, கொள்ளைக் கொடுமையும், வாழும் (வாழவேண்டிய) நம்பிக்கையைத் தகர்த்து விடுகின்றன. இந்த நம்பிக்கை பறிபோய்ப் பாழாய் விட்ட உள்ளங்களோடு தலைவனும் தலைவியும் வருந்துகின்ற வருத்தம் சோகத்தைப் பிழிந்து தரும் என்பதற்கு ஐயமும் உண்டோ? மனைவியை மட்டுமா; தனது இரத்தத்தின் இரத்தமான அரும்பெறற் புதல்வரையும் துறந்தாக வேண்டிய அபாக்கிய அவல நிலையைத் தாங்கிக் கொள்

அறிவுறுத்தல்

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மாகாண மட்ட தமிழ்த் தினப் போட்டி யாழ்ப்பாணத்தில் நடத்துவது சம்பந்தமான அறிவுறுத்தல் கூட்டம் எதிர்வரும் 31 ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 3.00 மணிக்கு யாழ். வலயக்கல்விப்பணிமனையின் முகாமைத்துவ மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாக மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர் இ. சிவராஜா அறிவித்துள்ளார். (உ-19)

## கூடைப்பந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவை நடத்திவரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்றுபி.ப4.30 மணிக்கு அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகபெண்கள் அணி எதிர்பட்டர்பிளை வி.க பெண்கள் அணியும், பி.ப 5.15 மணிக்கு இக்கழகங்களின் ஆண்கள் அணிகளும் மோதவுள்ளன. (உ-3)

## துரிதகதியில் புனரமைப்பு

(தென்மராட்சி)

சாவகச்சேரி பிரதேச சபையின் 6 பணிமனை பிரிவுகளிலும் நூறு நாள் வேலைத்திட்டங்களின் அடிப்படையில்உப வீதிகள் புனரமைப்புச் செய்யும் பணிகள் துரிதகதியில் இடம் பெற்று வருகின்றன.

சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை, நாவற்குழி, கைதடி, வரணி, கச்சாய், மிருசுவில் ஆகிய பிரிவுகளிலேயே இப்பணிகள் அமுல் செய்யப்பட்டு வருகின்றன.

இவ்வேலைகளை விரைவாக அமுல் செய்யவென அமைய அடிப்படையில் 15 வேலையாட்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். (உ-77)

## தொண்டர் சேவை படையணியினருக்கான கலந்துரையாடல்

(சுதுமலை)

அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள சரித்திரப் பிரசித்தி பெற்ற நல்லைக்கந்தனின்வருடாந்த உற்சவத்திற்குதொண்டர்சேவை ஆற்றுவதுதொடர்பாக யாழ். மாவட்ட மக்கள் நலன்புரிச் சங்கமும் விசேட படையணியினரும் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடல் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.30 மணிக்கு கொக்குவில்அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலின் இறுதியில் உற்சவகால செயற்பாடுகளுக்கான குழுக்கள் பிரிக்கப்படவுள்ளது. கடந்த வருடம் சிறப்பாக சேவையாற்றிய

வயிற்பிரிவு உ...
படுத்திக் காட்டி, எனினும்
மேற்குறித்த நால்வகையா
ரும பொருள் வயிற்பிரிவிற்கு
உரியர் என்று வரையறுத்துத்
தொல்காப்பியம் கூறியுள்
ளவை இவ்விடத்தில் குறிப்
பிடத்தக்கன. ஆரியமயப்
பட்ட வருணப்பிரிவுகளின்
அடிப்படையிலே அக்காலப்
பிரிவுகளைத் தொல்காப்பியர்
வகுத்தாரா, அல்லது அவருக்
குப் பின் வந்த உரையாசிரி
யர்கள் தங்காலக் கருத்துக்
களைத் தொல்காப்பியரில்
ஏற்றிக் கூறியுள்ளனரா என்
பது ஆய்விற்குரியது.

அகத்திணைப் பாடல்களிலே
தலைவர் தலைவியர் அவர்
களுக்கு இடப்பட்ட பெயர்கள்
கொண்டு சுட்டி உரைக்கப்பட்டு
வதில்லை குறிஞ்சி, முல்லை,

செல்வம் பெறவேண்டிய நாடு
கள், நாடுகள் அல்ல'' (காடு
கள்) என்பதே இக்குறளின்
பொருளாகும்.

சங்க காலம் பொற் காலம்
என்றும் அக்காலத்தில் வாழ்ந்
தோர் யாவரும் நாடிப்
பெறாது தாமே வளந்தரும்
நாட்டுச் செல்வத்தைத் துய்த்
தோர் என்றும் ஒரு மாயத்
திரையினை நாம் நெடுங்கால
மாய் இட்டு வருகின்றோம்.
ஆனால் அது உண்மையன்று
அரசர் குறுநிலத் தலைவர்
(இவர்களும் பெரும் செல்வர்
களல்லர்) நிலவுடைமையாள
ரான வேளிர் தவிர்ந்த பெரும்
பாலான மக்கள் இல்லாமை
யிலே உழன்றவர் தாம் புர
வலரைத் தேடிப் பழ

சங்ககாலத்...
எனப் பேராசிரியர் க.கைலாச
பதி கொள்வர். வீரயுககாலத்
திலே போர்கள், பெரும்
பாலும் ஒரே இனத்தவ
ரிடையே (தமிழர்) உள்
நாட்டிலேயே நடந்தவை,
மண்ணாசை, புகழ்வேட்கை
மானஉணர்வு, (மாண்புடை
மானம் + மாண் பிறந்த
மானம்), என்பவற்றால்
நிகழ்ந்தனவே. இவற்றால்
பாதிக்கப்பட்டவரும் ஒரே
இனத்தவரே. பாதிக்கப்பட்

பாழாய் விட்ட ...
களோடு தலைவனும் தலைவி
யும் வருந்துகின்ற வருத்தம்
சோகத்தைப் பிழிந்து தரும்
என்பதற்கு ஐயமும்
உண்டோ? மனைவியை மட்
டுமா; தனது இரத்தத்தின்
இரத்தமான அரும்பெறற்
புதல்வரையும் துறந்தாக
வேண்டிய அபாக்கிய அவல
நிலையைத் தாங்கிக் கொள்
வது தான் எங்ஙனம்? இத்
தனையும் எதற்காக?

அரிதாய அறன்எய்தி அருளியோர்க்கு அளித்தலும்
பெரிதாய பகைவென்று பேணாரைத் தெறுதலும்
புரிவுஅமர் காதலிற் புணர்ச்சியும் தரும் எனப்
பிரிவுஎண்ணிப் பொருள்வயின் சென்ற ...
(கலித்தொகை-10)

-வளரும்

...
ஏற்பாடு செய்யப்பட்ட கலந்
துரையாடல் எதிர்வரும்
ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.30
மணிக்கு கொக்குவில்அலுவல
கத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலின் இறு
தியில் உற்சவகால செயற்பாடு
களுக்கான குழுக்கள் பிரிக்கப்
படவுள்ளது. கடந்த வருடம்
சிறப்பாக சேவையாற்றிய
பதவி நிலை அங்கத்தவர்
கள், பாடசாலைஅணித்தலை
வர்கள் முதலுதவி படையணி
அங்கத்தவர்களை தவறாமல்
கலந்து கொள்ளுமாறு சங்கத்
தின் பயிற்சி ஒருங்கிணைப்பா
ளர் ப. சஞ்சித்குமார்கேட்டுள்
ளார். (து-5,252)

# மீளக்குடியமர்ந்தோர்க்கு மின் விநியோகம்

## சாவ.பிரதேசசபைதீர்மானம்

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேசத்
தில் மீளக்குடியமர்ந்த12 ஆயி
ரத்துக்கும் மேற்பட்ட குடும்
பங்களுக்கு வைத்தியவசதி
இன்னமும் முழுமையாகக்
கிடைக்கவில்லை. எனவே
மீளக்குடியமர்ந்த குடும்பங்
களின் நன்மைகருதி உடனடி
யாக சாவகச்சேரி மாவட்ட
வைத்தியசாலையை முழுமை
யாக இயங்கச்செய்வதற்கான
நடவடிக்கைகள் காலதாமத
மின்றி மேற்கொள்ளப்பட
வேண்டும்.

நேற்றுமுன்தினம் நடை
பெற்ற சாவகச்சேரி பிரதேச
சபையின் மாதாந்தக்கூட்டத்
தில் இவ்வாறு ஏகமனதாகத்
தீர்மானிக்கப்பட்டது.

பிரதேச சபைத்தலைவர்
தலைமையில் இக்கூட்டம்
கொடிகாமத்திலுள்ள சாவகச்
சேரி பிரதேசசபைக் காரி
யாலயத்தில் நடைபெற்றது.

தென்மராட்சிப் பிரதேசத்
தில் மக்கள் அதி ஈளவில் மீளக்
குடியமர்ந்து வருவதால்,
இலங்கை மின்சாரசபை மின்
விநியோக நடவடிக்கைகளை
தாமதமின்றி மேற்கொள்ள
வேண்டும்எனவும் தீர்மானிக்
கப்பட்டது. இவ்விரு
முக்கிய தீர்மானங்
களும் சம்பந்தப்பட்டவர்
களின் கவனத்துக்கு அனுப்பி
வைக்கப்படவும் நடவடிக்கை
எடுக்கப்பட்டுள்ளது. (உ-77)

ஆளும்கட்சி-எதிர்க்கட்சி இழுபறி தொடரின்

# பாராளுமன்றத்தில் குண்டுத் தாக்குதல்கள் கூட இடம்பெறலாம்

## சபைத் தலைவர் எச்சரிக்கிறார்

(கொழும்பு)

பாராளுமன்றத்தில்நேற்று
முன்தினம் ஏற்பட்ட குழப்பம்
ஜனநாயகத்துக்கு விடுவிக்கப்
பட்ட அச்சுறுத்தல் என
அரசாங்க எதிர்தரப்புமித
வாத பாராளுமன்ற அங்கத்த
வர்கள் கருத்து தெரிவித்துள்
ளனர்.

அமைச்சர் ரா ஜிதசேனரட்
னாவினால் ஜனாதிபதி
கைப்பை தொடர்பாக விடுக்
கப்பட்ட அறிக்கையைக் கண்
டித்து எதிர்க்கட்சித் தலைவர்
மகிந்த ராஜபக்ஷா விசேட
அறிக்கையொன்றை வாசித்த
போது எதிர்க்கட்சி அங்கத்த
வர்கள் பதாதைகள் ஏந்தி
ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட
வேளை அது கைகலப்பில்
முடிந்தது.

அதேவேளை, பாராளுமன்
றத்தில் இவ்வாறான சம்பவங்
கள் நடை பெற்றால் அது
குண்டுத் தாக்குதல்களாக
கூட மாறலாம் என சபைத்
தலைவரும், அமைச்சருமான
வி.ஐ.மு லொக்குபண்டார
செய்தியாளர்கள் மத்தியில்
தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பாராளுமன்
றத்தில் நேற்று முன்தினம்
நடந்த கைகலப்புக்களை
பயன்படுத்தி அரசாங்கம்வாக்
கெடுப்பின்றியே பெறுமதி
சேர் வரிச்சட்டம்
கூட்டப்பட்ட வற்வரிசட்ட
மூலம் நிறைவேற்றப்பட்ட
தாக எதிர்க்கட்சித் தலைவர்
குற்றம் சாட்டியுள்ளார்.

இந்த சட்ட மூலத்தை மீண்
டும் விவாதத்திற்கு விடப்
பட வேண்டும்என அரசாங்
கத்திடம் வேண்டுகோள்
விடுக்கப்படவுள்ளதாகவும்
தெரிவித்துள்ளார். (உ-8)

# உரிமைக்காக குரல் கொடுப்பதும் உயிரை துறப்பதும் பயங்கரவாதமா?

## சென்னை மாநாட்டில் விநாயக மூர்த்தி எம். பி

(யாழ்ப்பாணம்)

பாரதத்தை ஈழத்தமிழர் தமது தாய் நாடாகவே கருது கிறார்கள் தாய்க்கும் சேய்க்குப் உள்ள உறவாகவே அது தொடரவும் வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ. விநாயகமூர்த்தி கடந்த 20 ஆம் திகதி சென்னையில் இடம் பெற்ற உலகத் தமிழர் பேரவை மாநாட்டின் தொடக்க விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது;

வீரத்துறவி சுவாமிவிவேகானந்தர் வாழ்ந்த புனிதமான இந்த நாட்டின் பெருமையையும் தமிழர்களின் தனித்துவத்தையும் தமிழின் இனிமையையும் பழ நெடுமாறன், வை. கோ. போன்றோர் கட்டிக் காத்து வருகிறார்கள். தமிழரின் உரிமைக்குரல்களாகஒலிக் கின்றார்கள்.

இலங்கை திருநாட்டில் மலரப் போகும் சமாதானத் திற்கு இந்தியாவும் ஆசி வழங்கி வரவேற்க வழிவகை செய்யவேண்டும்.

தமிழர்கள் அனைவரும் ஒன்றுபட்டு தமது தனித்துவம் பேணவேண்டும் என்னும் எமது பெருவிருப்பானது இன்று நிறைவேறியுள்ளது. இந்நேரத்தில் ஈழத்தமிழர் பற்றிய ஓர் உண்மையையும் கூறி வைக்கவேண்டும்.

1956, 1958, 1983 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற கொடூரங்கள், தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட காடைத்தனங்கள் என் பவற்றுக்குப் பின்பு அதற்கு எதிராகவும் தமது உரிமைக்காகவும் ஆயுதம் ஏந்த வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு ஏற்பட்டது. இது பயங்கர வாதமா? ஈழத்தமிழர் பயங்கரவாதிகளா? உரிமைக்காகக் குரல் கொடுத்து உன்னத உயிர்த்தியாகங்களால் தமிழனைத் தலை தூக்க வைப்பவர்கள் பயங்கரவாதிகளா? இது தமிழர் தம் தார்மீகக் கடமை. இது அவர்களின் உரிமைக்காக ஒலிக்கும் குரல் தான் என்பதை சரித்திரம் கூறும் என்றார். (ஷ)

## வெங்காயப் பயிரில் தாள் கோதித் தாக்கம்

தற்போது யாழ் குடாநாட்டில் வெங்காயத் தாள் கோதியின் தாக்கம் ஆங்காங்கே காணப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது. இது ஒரு பூச்சித்தாக்கம். கபில நிறமான அந்துப் பூச்சி தாளகளின் நுனியில் முட்டைகளை வெண்ணிறக் குவியல்களாக இடும். முட்டைகள் 6 - 7 நாள்களில் பொரித்து அதிலிருந்து வரும் புழுக்கள் தாளினுள் சென்று அங்கிருந்து தாளின் பச்சையத்தை உண்ணும். இதனால் தாளகள் வெண்ணிறமடையும். தாக்குண்ட தாள்களைப் பிரித்துப்பார்க்கும் போது உள்ளே புழுக்களையும், அதன் எச்சங்களையும் அவதானிக்க முடியும். தாக்கம் அதிகரிக்கமுன் தங்கள் பகுதி விவசாய போதனாசிரியரை அணுகி அவரிடம் அறிவுரைகளை கேட்டறிந்து கட்டுப்பாட்டு முறைகளை மேற்கொள்ளவும். இத்தாக்கத்திற்கு பின் வரும் மருந்துகளில் ஒன்றை தெரிவு செய்யலாம்.

அற்றபிறோன் 10 மி. லீற்றர் மருந்துக்கு 10லீற்றர் நீரும், டிசிஸ் 06 மில்லி லீற்றர் மருந்துக்கு 10 லீற்றர் நீரும், பேதிரோயிட் 11 மி. லீற்றர் மருந்துக்கு 10லீற்றர் நீரும் என்ற ஐதாக்கல் வீதத்தில் பயன்படுத்தலாம். வெங்காயத் தாளில் அதன் வழுக்கும் தன்மை காரணமாக மருந்துக்கரைசல் அதிக நேரத்திற்கு நிலைத்து நிற்கமுடியாத காரணத்தினால், மருந்துடன் சேர்த்து சேபெக்ரன் என்னும் ஒட்டியையும் கலந்து விசிறும்படி யாழ்ப்பாணம் உதவி விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கம்) அவர்களால் ஆலோசனை வழங்கப்படுகிறது.

## நிரந்தர சமாதானத்திற்கான பல்கலை அறிஞர்களின் மாநாடு 28 ஆம் திகதி

(தென்மராட்சி)

ஜனநாயகத்திற்கும் அபிவிருத்திக்குமான மையம், ஜனநாயகஉரிமைகளைப் பாதுகாப்பதற்கான இயக்கம் ஆகியவற்றின் அனுசரணையுடன் நிரந்தர சமாதானத் திற்கான பல்கலைக்கழக அறிஞர்களின் மாநாடு எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது

இம்மாநாட்டில் இலங்கையிலுள்ள அனைத்துப் பல் கலைக்கழகங்களினதும் கல்வியியல் அறிஞர்கள் பெரும் எண்ணிக்கையில் பங்கு கொள்ளவுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

தற்போது இடம்பெறும் சமாதான நடவடிக்கைகளின் விபரங்கள் பற்றியும் ஒப்பந்தங்கள்பற்றியும் பல் கலைக்கழகங்களின்கல்வியியல் அறிஞர்கள் விரிவாக ஆராய்ந்து சமாதானம்பற்றிய தமது திடசங்கற்பத்தையும் அர்ப்பணிப்பையும் பிரகடனப்படுத்துவார்கள் என மாநாட்டின் ஏற்பாட்டாளர் கள் தெரிவித்துள்ளனர். (உ-77)

## வீதி புனரமைப்பு

(தென்மராட்சி)

சாவகச்சேரி பிரதேசசபைக் குட்பட்ட தவசிக்குளம் மிருசுவில் வீதி நான்கு லட்சம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது. (உ-77)

## இராசி பலன்

26-7-2002
(ஆடி 10, வெள்ளி)
துதியை பி.ப.4.31 வரை
அவிட்டம் ந.இ 11.25 வரை
ராகுகாலம்-10 32-12.02
நல்ல நேரம்-6·02-7.32

**மேடம்**
நல்ல வரவேற்பு, தொழில் முன்னேற்றம், காரிய அனுகூலம், தெய்வ தரிசனம்.

**இடபம்**
கடுமையான முயற்சி, பிறர் உதவி, தூரதேசச் செய்தி, முயற்சி கை கூடும்.

**மிதுனம்**
உடல்நலக்குறைவு, தொழில் கஷ்டம், குடும்பநன்மை, பிரயாணம்.

**கடகம்**
காரியதாமதம், வாகன பயம், உடல்வியாதி, உறவினர் மனஸ்தாபம்.

**சிங்கம்**
நண்பர்கள் உதவி, தெய்வ தரிசனம், தொழில் முன்னேற்றம், காரிய அனுகூலம்,

**கன்னி**
செய் தொழில் விருத்தி, எடுத்த காரியம் கை கூடும், சுவாரஸ்யம், உடல் நலம்.

**துலாம்**
வியாபார நன்மை, சிறு வியாதி, முயற்சிதாமதம், திடீர் மாற்றம்,

**விருச்சிகம்**
உறவினர்சந்திப்பு, பொருள் விரயம், ரோகபயம், காரிய தாமதம்,

**தனுசு**
எதிர்பாராதநன்மை, காரிய அனுகூலம், பொருள் சேர்க்கை, பிரயாண சுகம்,

**மகரம்**
தேவையற்ற விவாதம், மாதர் நட்பு, முயற்சி தாமதம், தனவிரயம்.

**கும்பம்**
பெரியோர்ஆதரவு, தெய்வ தரிசனம், காரியஅனுகூலம் போசன சுகம்.

**மீனம்**
தொழில் கஷ்டம், காரிய அலைச்சல், சுபசெலவு, அமைதிக் குறைவு.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து சமாதான மாநாட்டுக்கு செல்வோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைமறைக்கல்லூரியில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள நிரந்தரசமாதானத்திற்கான பல்கலைக் கழக அறிஞர்களின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக யாழ். பல்கலைக் கழகத்திலிருந்து செல்லவுள்ளோர் விபரம் வருமாறு;

பட்டப்பின் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் சி.க. சிற்றம்பலம், விவசாய பீடாதிபதி எஸ். ராஜதுரை, மெய்யியல்துறைசிரேஷ்டவிரிவுரையாளர், கலாநிதி கே. சிவபாலன், நூலகர் திருமதி. ஆர். பரராஜசிங்கம், வணிகத்துறை விரிவுரையாளர் கே. சிவராஜா, கல்வியியல் பேராசிரியர்எஸ். ஜெயராசா கிறிஸ்த நாகரிகத்துறை விரிவுரையாளர் வணபிதா ஜி. பிலேந்திரன், பொருளியல்துறை தலைவர் வி.பி. சிவநாதன் புவியியற்துறை தலைவர் பேராசிரியர் ஆர். சிவச்சந்திரன்,

யுத்தத்திற்கு எதிராக சமாதானத்திற்கும், ஜனநாயகத் திற்கும், மனித உரிமைகளுக்குமான இம்மாநாட்டில் 'அரசியல், அரசியலமைப்பு, ஜனநாயகம்' என்ற தலைப்பில் பேராசிரியர் சி.க. சிற்றம்பலமும், 'சமூகம், பொருளாதாரம், மனிதாபிமானம்' என்ற தலைப்பில் விவசாய பீடாதிபதி எஸ். ராஜதுரையும், சமாதானம், யுத்தநிறுத்தம், பேச்சுவார்த்தை என்ற தலைப்பில் வண. பிதா பிலேந்திரன்அடிகளாரும்கருத்துரைவழங்கவுள்ளனர். (ஷ-19)

## வெளிநாடுகளில் இருந்து வைத்திய நிபுணர்களை வரவழைக்க ஏற்பாடு

(தென்மராட்சி)

நாட்டிலுள்ள ஆஸ்பத்திரிகளில் வைத்திய நிபுணர்களுக்கு நிலவிவருகின்ற தட்டுப் பாட்டினை நீக்குவதற்கு வசதியாக வெளிநாடுகளில் இருந்து வைத்திய நிபுணர்களை வரவழைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகத் தெரியவருகின்றது.

ஆஸ்பத்திரிகளில் தற்போது நிலவிவரும் வைத்திய நிபுணர்களுக்கான தட்டுப் பாட்டை நீக்குவதற்கு இதை விட வேறு குறுகிய காலத்தீர்வுகள் எதுவும் இல்லை என கண்டறியப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ்.குடாநாட்டில் வைத்திய நிபுணர்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நீண்டகாலமாக நிலவிவருவதும் குறிப்பிடத்தக்கதாகும். (ஷ-77)

## யாழ் மகளிர் அணி பூப்பந்தாட்டத்தில் சம்பியன்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் திருகோணமலையில் நடைபெற்றவடக்கு கிழக்கு மாகாண மட்டபூப்பந் தாட்டப் போட்டியில் யாழ். மாவட்ட மகளிர் அணி சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது.

இதன் மூலம் தேசியமட்ட பூப்பந்தாட்டப் போட்டிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பை இவ் வணி பெற்றுள்ளது. (ஷ-6)

## சமாதானத்திற்கான குழு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேரில் சென்று உதவி

(யாழ்ப்பாணம்)

கியூடெக்கின் ஏற்பாட்டில் சமாதானத்திற்கும் ஐக்கியத் திற்குமான குழு ஒன்று வண. பிதா சிறிஸ் பெர்னாண்டோ தலைமையில் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளது.

இக்குழு கிராமப்புறப்பாடசாலைகளுக்குச் சென்று அங்குள்ள மாணவர்களின் கல்வி நிலைகளையும் அவர்கள்எதிர் நோக்குகின்ற பிரச்சினைகளையும்அறிந்து அவர்களுக்கு வேண்டிய பாடசாலை உபகரணங்களை வழங்கியுள்ளதுடன்,

நலன்புரி நிலையங்களுக்கு சென்று அங்கு தங்கியுள்ளவர்களுக்கு சுய தொழில் ஊக்குவிப்பு நிதியையும் வழங்கியுள்ளது. (உ-6)

## கொழும்பு தொல்பொருள் காட்சிச் சாலையில் பிழையான தமிழ்மொழி பிரயோகங்கள், குறிப்புகள்

(ஈச்சமோட்டை)

கொழும்பிலுள்ள நூதன சாலையில் அதிகளவான சொற்பிழைகளுடன் கூடிய தமிழ் எழுத்துக் குறிப்புக்கள் காணப்படுகின்றன.

இங்கு இலங்கையின் கலாசாரவரலாற்றுதொல்பொருட் சான்றுகள் பல பாதுகாக்கப் பட்டு வருகின்றமை தெரிந்ததே,

பௌத்த, இந்து, கிறிஸ்தவ சமயங்களின் தொல்லியல் சான்றுகள், அரசர்களின் பாவனைப் பொருட்கள், பழங்குடி இனங்களின் ஆயுதங்கள் சுவடுகள், கல்வெட்டுக்கள், நாணய அலகுகள் எனப் பல வரலாற்றுச்சான்றுகளைக் கொண்டுள்ள இங்கு, தமிழ் மொழிப் பிரயோகங்கள் பல பிழையாகவும் நகைப்பிற் கிடமாகவும் இருப்பது பற்றி தமிழ் மக்கள்வருத்தம் தெரிவித்துள்ளனர். (ஷ-59)

## மீளக் குடியமர்ந்த மக்களின் சமூக நல அடிப்படைத் தேவைகள் குறித்து ஆராய்வு

(காரைநகர்)

காரைநகர்ப் பகுதியில் மீளக் குடியமர்ந்துள்ளவர்களின் வீடுகளுக்குச் செல்லும் யு. என். எச். சி. ஆர். அமைப்பு உத்தியோகத்தர்கள், அவர்களது சமூகநல அடிப்படைத் தேவைகள் குறித்து ஆராய்ந்துள்ளனர்.

காரைநகரில் உள்ள 9கிராம சேவையாளர் பிரிவுகளில் இப் பணி இடம்பெற்றுள்ளது.

இதன் அடிப்படையில், இனம் காணப்பட்ட உதவிகள் இயன்ற அளவில் வெகு விரைவில் வழங்கப்படவுள்ளதாக யு. என். எச். சி. ஆர். வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-246)

## வலி. வடக்கில் மீள்குடியமர்வு பாதுகாப்பு அமைச்சுடன் கூட்டமைப்பு பேச்சு இம்மாத இறுதியில் நடக்கும்

(யாழ்ப்பாணம்)

வலி. வடக்குப் பிரதேச மக்கள் மீள் குடியமர்வு சம்பந்தமாக பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுடனும் சட்டமா அதிபர் கமலசபேசனுடனும் இம் மாத இறுதிப்பகுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சுவார்த்தை நடத்தவுள்ளது.

பேச்சுவார்த்தையில் கூட்டமைப்பு எம்பிக்களான ஜீ.கஜேந்திரகுமார், என்.ரவிராஜ், அ. விநாயகமூர்த்தி ஆகியோர் பங்குகொள்ளவுள்ளனர். (உ-19)

# ஓகஸ்ட் 2 இற்கு முன் படையினர் வெளியேறுவது சாத்தியமில்லை

## அமெரிக்காவில் பிரதமர் ரணில் அறிவிப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் பொதுஇடங்களில் அமைந்துள்ள இராணுவ முகாம்களை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம்2ஆம் திகதிக்கு முன்னர் அகற்றுவதில் அரசு பெரும் சிக்கல்களை எதிர்கொண்டுள்ளது.

இவ்வாறு தற்போதுஅமெரிக்க விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருப்பதாக ராய்ட்டர் செய்திநிறுவனம்தகவல் வெளியிட்டுள்ளது.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் பொதுஇடங்களில் உள்ள இராணுவ முகாம்களை அகற்றி வேறிடங்களுக்குமாற்றுவதற்குப் பொருத்தமான இடம் இல்லாமை, புதிதாக முகாம் அமைப்பதற்கு நிதி ஒதுக்குவதில் உள்ள நெருக்கடிகளே இதற்குக் காரணமாகும்.

எனினும், ஓகஸ்ட் 21 ஆம் திகதிக்குள் இம் முகாம்களை அகற்றும் பணி பூர்த்தியடைந்து விடும் என நம்புவதாக பிரதமர் தெரிவித்திருப்பதாக ராய்டர் செய்தியில் மேலும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை, இம் மாதம் 16 ஆம் திகதி தமிழ் தேசிய கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க,

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் ஓகஸ்ட் மாதம்2 ஆம் திகதிக்கு முன்பாக வடக்கு - கிழக்கு பாடசாலைகள், வணக்கஸ்தலங்கள் மற்றும் பொது இடங்களிலுள்ள படையினர் முற்றாக வெளியேறிவிடுவர் என உறுதியளித்திருந்தமை குறிப்பிடத் தக்கது. (உ-9)

# இன்று ஒரு தகவல்

## அண்ணாவுக்குக் கணேசன் அன்புடன் தந்த தேநீர்

அண்ணா தொடங்கிய திராவிட முன்னேற்றக் கழகம் தமிழக இளைஞர்களிடையே புதுக் கருத்துக்களை விதைத்தது. அவர்களின் ஆதரவைப்பெற்று வளரத் தொடங்கியது. கழக நிதிக்காக நாடகங்கள் நடத்தினார்கள்'. சமூகச் சீர்திருத்த நாடகங்களில் அறிஞர் அண்ணாவும், சருணாநிதியும் பங்கேற்றுப் பலவிதமான பாத்திரங்களில் நடித்தார்கள். சிவாஜி கணேசன் அண்ணாவிடம், அவரது புதுமைக் கருத்துக்களிடம் ஈடுபாடு கொண்டவர். காஞ்சிபுரத்தில் கணேசன் சில நடிகர்களைச் சேர்த்துக் கொண்டு ஆர்வத்துடிப்போடு நாடகம் நடத்திக் கொண்டிருந்தார்.

ஒரு சமயம் தன்னுடைய நாடகத்தைப் பார்க்க அண்ணாவை சிவாஜிகணேசன் விரும்பி அழைத்தார். ஒரு நாள் நாடகத்துக்கு அண்ணா தலைமை வகித்துப் பாராட்டுரை வழங்கச் சம்மதித்தார். அதே நாளில் அண்ணாவுக்குச் சென்னை வண்ணாரப்பேட்டையிலுள்ள தியாகராய கல்லூரியில் விழா ஒன்றில் கலந்து கொள்ள வேண்டிய நிகழ்ச்சியும் இருந்தது. அதற்காகச் சென்னைக்குச் சென்றிருந்த அண்ணா வாக்களித்திருந்தபடி தன்னுடைய நாடகத்துக்குத் தலைமை ஏற்க வருவாரா என்ற தவிப்பு சிவாஜிகணேசனுக்கு ஏற்பட்டது. நடிகர்களிற் சிலர் அண்ணாவுக்குச் சென்னையில் முக்கியமான அலுவல்கள் இருப்பதால், காஞ்சிபுரம் நாடகத்துக்கு வரமாட்டார் என்றுதான் எண்ணினார்கள். தன்னிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டவராதலால் அண்ணா எப்படியும்வந்துவிடுவார் என்று எதிர்பார்த்தார் சிவாஜிகணேசன்.

தியாகராயக் கல்லூரிநிகழ்ச்சியில் கலந்து கொண்ட அண்ணாவுக்கு மாலை ஏழுமணிக்குள் எப்படியும் காஞ்சிபுரம் போய் விடவேண்டும். கணேசனிடம் தெரிவித்திருந்த படி நாடகத்துக்குத் தலைமை வகிக்க வேண்டும் என்ற திட்டமும் தவிப்பும் இருக்கவே செய்தன. ஆனால் காஞ்சிபுரம் போக அண்ணாவிடம் கார் இல்லை. கூட இருந்த நண்பர்களும் அதே நிலையில் இருந்தார்கள். இருந்தாலும் யாருடையகாரிலாவது எப்படியாவது இருட்டுவதற்குள் காஞ்சிபுரம் சென்று விட வேண்டும் என்ற நம்பிக்கையோடு இருந்தார் அண்ணா. அதே நேரத்தில் எஸ்.எஸ்.பி லிங்கம் தன்சொந்தக் காரோடு அண்ணாவைக் காண வந்தார்: காரோடு சரியான நேரத்தில் லிங்கம் வந்திருந்ததில் அண்ணாவுக்கு மட்டற்ற மகிழ்ச்சி ஏற்பட்டது.

'உங்களுடைய காரில் காஞ்சிபுரம் போகலாமா? என்று லிங்கத்தை அண்ணா கேட்டார்.' 'தாராளமாக' என்று லிங்கம் சொல்லிக் கொண்டே தன் மனதையும் திறந்து, காரின் கதவையும் திறந்து விட்டார். சிலநிமிடங்களில் அண்ணா நண்பர்களோடு அந்தக்காரில் காஞ்சிபுரம் கிளம்பினார். அண்ணாவைக் கண்டதும் சிவாஜி கணேசன் உள்ளம் பூரித்தார். நாடகப் பாத்திரத்திற்குரிய (மேக் அப் போடு) ஒப்பனையுடன் ஓடி வந்து அண்ணாவை வணங்கினார். தன்கைகளாலேயே அண்ணாவுக்குத் தேநீரும் பிஸ்கட்டும் வழங்கினார். சிவாஜிகணேசனிடம் அப்போது அண்ணாவுக்கு இருந்த ஈடுபாட்டைக் காஞ்சிபுரம் நாடகத் தலைமை படம் பிடித்துக் காட்டியது.

நவீனன்

# சாவ. ஆஸ்பத்திரிக்குச் செல்லும் நோயாளர் தொகை அதிகரிப்பு

## எனினும் பணியாளர் பற்றாக்குறை தொடர்கிறது

(தென்மராட்சி)

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலைக்கு சிகிச்சை பெற வரும் வெளிநோயாளர்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருகின்றது.

ஆயினும், இங்கு வரும் நோயாளர்களுக்குச் சேவை செய்வதற்குப் போதிய பணியாளர்கள் இல்லாமை இருப்பது பற்றித் தெரியவருகின்றது.

இவ்வைத்தியசாலையின் 35 நிரந்தர ஊழியர்களில் தற்போது 15 ஊழியர்கள் மட்டுமே கடமையாற்றுகின்றனர்.

இதேவேளை, சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் கடமையாற்றிய பணியாளர்கள் வேறு வைத்தியசாலைகளில் பணிபுரிய தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-77)

## மார்புநோய் தடுப்புப் பிரிவிற்கு மோட்டார் சைக்கிள்

(சுதுமலை)

உலக சுகாதார ஸ்தாபனத்தால் கொழும்பிலுள்ள காசநோய்த் தடுப்பு இயக்கப் பிரிவுக்கு 50 மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவற்றில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் யாழ். மாவட்ட மார்புநோய் சிகிச்சைப் பிரிவுக்கு விரைவில் அனுப்பி வைக்கப்படவுள்ளதாக கடந்த வாரம் யாழ்ப்பாணம் வந்திருந்த வெலிசறராகம மார்புநோய் சிகிச்சை நிலையத்தின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்தார். (ஷ-252)

## அரச பணியாளர்களுக்கு ஆக்கப் போட்டிகள்

(கொழும்பு)

அரச நிறுவனங்களில் தொழில் புரிபவர்களின் ஆற்றலை வெளிப் படுத்தும் முகமாக மனிதவள அபிவிருத்தி கல்வி கலாசார அலுவல்கள் அமைச்சினால் சிறுகதை, கவிதை, பாடல் ஆக்கம் ஆகிய போட்டிகள் நடத்தபடவுள்ளன.

இப் போட்டிகளில் கலந்து கொள்ள விரும்புவோர் ஆகஸ்ட்மாதம்25ஆம்திகதிக்கு முன்னர் தமது ஆக்கங்களை அத்தாட்சியுடன் செத்சிறிபாய பத்தர முல்லை என்னும் முகவரிக்கு அனுப்பவேண்டும் என தெரிவிக்கப்படுகிறது. (உ-3)

## இளைய தலைமுறை அரசியல்வாதிகள் மத்தியில் ஆளுமைபற்றிய விழிப்பு

(கொழும்பு)

இளைய தலைமுறை அரசியல் வாதிகள் மத்தியில் ஆளுமை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, இலங்கை மன்றக் கல்லூரி புதிய திட்டமொன்றை ஆரம்பித்துள்ளது.

நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கென நியமிக்கப்பட்டுள்ள ஆலோசகர்கள் 40 பேருக்கு முதற்தடவையாக இம்மன்றத்தின் மூலம் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

சிறந்த ஆளுமை தொடர்பான மூன்று வித பயிற்சிகளை இவர்கள் பெறவுள்ளனர் என மன்றக் கல்லூரியின் பணிப்பாளர் சமன்வீரவன்ச தெரிவித்துள்ளார். (உ-8)

## மகப்பேற்று நிலையம் மீள இயக்கம்

(கொழும்புத்துறை)

கடந்தகால யுத்த அனர்த்தங்களால் இயங்க முடியாத நிலையில் இருந்த கொழும்புத்துறை அரசினர் ஆரம்ப மகப்பேற்று நிலையம் மீண்டும் பழைய இடத்திலே இயங்க ஆரம்பித்துள்ளது.

கொழும்புத்துறைப் பகுதியிலே மக்கள் மீளக்குடியமரத் தொடங்கியதை அடுத்து மேற்படி கட்டடத்தில் நிலை கொண்டிருந்த இராணுவத்தினர் வெளியேறியமை குறிப்பிடத்தக்கது. (உ-262)

### யாழ்ப்பாணம் நவீன சந்தையை

## அழகு படுத்த வெளிநாட்டு பிரஜை நிதி உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நவீன சந்தையை நவீனப்படுத்தி, புதுப்பொலிவூட்டுவதற்கு வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் முன்வந்துள்ளதாக யாழ். மாநகர சபை மேயர் செ. கந்தையன் தெரிவித்தார்.

மேற்படி வெளிநாட்டுப் பிரஜை நவீன சந்தைக் கட்டடத் தொகுதிகளைப் பார்வையிட்டதுடன் அவற்றை அழகு படுத்துவதற்குரிய நிதியை வழங்க உறுதியளித்திருப்பதாகவும்.

மேலும் நகரில் காணப்படும் மகாத்மாகாந்தி மற்றும் ஔவையார் சிலைகளுக்கு தீந்தை பூசுவதற்குரிய நிதியையும் வழங்குவதற்கு அவர் முன்வந்துள்ளதாகவும் மேயர் மேலும் தெரிவித்தார். (ஷ-6)

## சிறுவர்களை இயக்கத்தில் இணைப்பதில்லை

### சு.ப. தமிழ்ச் செல்வன் உறுதி

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் 18 வயதுக்கு குறைந்தோரை இணைத்துக் கொள்வதில்லை யென அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் உறுதியளித்துள்ளார்.

அண்மையில் சர்வதேச மன்னிப்புச்சபையின் தூதுக் குழுவினரை சந்திந்த போதே இவ்வுறுதியையளித்துள்ளார்.

சர்வதேச மனிதாபிமான நிறுவனங்கள் வடக்கு-கிழக்கு பகுதிகளில் வாழும் சிறுவர்களின் நலன்களைகவனிக்க தவறிவிட்டதால், தாம்அப்பிரதேசங்களில் சிறுவர் நலன் புரி நிலையங்களை திறந்திருப்பதாகவும் தமிழ்ச்செல்வன் சுட்டிக் காட்டினார்.

இத் தூதுக் குழுவினர் இந்த வார இறுதியில் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கஆகியோரை சந்தித்துபேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர் எனவும் தெரியவருகிறது. (உ-8)

## மழலைகள் மெய்வன்மை போட்டி

(யாழ்ப்பாணம்)

கைதடிமேற்கு சரஸ்வதிஅறவழி மழலைகள் கல்விப் பூங்காவின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

திருமதி வினோதினி சுதர்சன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக அருட்தந்தை சி. ஜி. ஜெயக்குமார் கலந்துகொள்ளவுள்ளார். (ஷ-6)

### மாவீரர் இல்லங்கள் புனரமைப்பு

## மனமுவந்து மக்கள் நிதியுதவி அளிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணமாவட்டத்தில் சிதைந்துசீரழிக்கப்பட்டமாவீரர் துயிலும் இல்லங்கள் மக்களின் பங்களிப்போடு புனரமைக்கப் பட்டு வருகின்றமை யாவருக்கும் தெரிந்ததே.

இப்பணி மேலும் சிறப்புற நடைபெறுவதற்கு நிதிப் பங்களிப்புச் செய்ய விரும்புபவர்களிடம் இருந்து நிதியுதவி எதிர்பார்க்கப்படுகின்றது.

பங்களிப்புச்செய்யவிரும்புபவர்கள் மாவீரர் துயிலும் இல்லத்தில் இயங்கும்பணிமனையிலோ அல்லதுஅவற்றிற்கான வங்கிக் கணக்கிலக் கங்கள் மூலமோநிதியை வழங்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்திற்கான பங்களிப்பை நெல்லியடி மக்கள் வங்கிக் கிளையில் 2463என்ற இலக்கத்தினூடாகவும் கோப்பாய் துயிலுமில்லத்திற்கான பங்களிப்பை காங்கேசன்துறை மக்கள் வங்கிக்கிளையின் 15421என்ற இலக்கத்தினூடாகவும்கொடிகாமம்மாவீரர் துயிலும் இல்லத்திற்கான பங்களிப்பை சாவகச்சேரி மக்கள் வங்கிக்கிளையின் 20018 எனும் இலக்கத்தினூடாகவும் பணத்தை வைப்புச் செய்யலாம் என்று மாவீரர்துயிலும் இல்லங்களின் புனரமைப் புக் குழு கேட்டுள்ளது. (உ-5)

# ஜனாதிபதியின் அளவுக்கு மீறிய அதிகாரம்

# அமைதி முயற்சிக்கு மாபெரும் அச்சுறுத்தல்

## தமிழ் ஹார்டியன் ஆசிரிய தலையங்கம்

(லண்டன்)

ஐக்கிய தேசிய முன்னணி அரசினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகளையும், ஐக்கிய தேசியக்கட்சியையும் ஜனாதிபதிசந்திரிகா குமாரதுங்கா தாக்கிபேசி வருவதாக தமிழ் ஹார்டியன் பத்திரிகை தனது ஆசிரிய தலையங்கத்தில் சுட்டிக்காட்டியுள்ளது

அவ்வாசிரிய தலையங்கத்தில் மேலும் தெரிவித்திருப்பதாவது;

சிறிலங்கா ஜனாதிபதிக்குள்ள அளவுக்கு மீறிய அதிகாரங்கள் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் அமைதி முயற்சிகளுக்கு மாபெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளன.

வெளிநாட்டில்இருந்துபெறுமதி வாய்ந்த ஆடம்பரகார் வகைகளை ஜனாதிபதி கொள்வனவு செய்ததில் ஊழல்கள் இடம் பெற்றிருப்பதாக எழுந்திருக்கும் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் அவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவதற்கு ஐக்கிய தேசியக்கட்சி முயற்சி எடுத்திருப்பதையும்தமிழ் ஹார்டியன் தனது ஆசிரிய தலையங்கத்தில் சுட்டிக்காட்டிபிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிற்குப் பெரும்பான்மைப்பலம் இல்லாதவிடத்து சமாதான முயற்சிகளுக்கு சிறிலங்காப் படைகள் ஒத்துழைக்காதுவிட்டால் அவருக்கு நெருக்கடியை ஏற்படுத்தும்என்றும்தெரிவித்துள்ளது.

சிறிலங்கா அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே சமாதானப் பேச்சுக்கள் தாமதமடைந்து வரும் நிலையில் நோர்வேயின் அனுசரணையுடன்சமாதான முயற்சிகள் தொடர்ந்து நடைபெறுமா என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும் என்றும் அந்த ஆசிரிய தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## மீள் திகதிகளை பெறலாம்

(யாழ்ப்பாணம்)

சாரதி அனுமதிப் பரீட்சைக்கு தோற்றத் தவறியவர்கள் மற்றும் சித்தி எய்தத் தவறியவர்கள் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி தங்கள் பரீட்சைக்கான மீள் திகதிகளை செயலக மோட்டார் போக்குவரத்து காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சாரதி அனுமதிப் பத்திர விண்ணப்பங்களை விநியோகித்ததில் மற்றும்விண்ணப்பப் படிவங்களை மீள எடுக்கும் நடவடிக்கைகள் எதிர்வரும் 12 ஆம் திகதி தொடக்கம் நடைபெறும்என மோட்டார் போக்குவரத்துப் பிரிவினர் அறிவித்துள்ளனர். (உ-2)

# உலக தரிசனம்

## அமெரிக்க உதவிகள் குறித்து தமிழ் மக்கள் அச்சப்படத் தேவையில்லை

### பிரதமரின் செயலர் பி. பி. சிக்கு பேட்டி

(வாஷிங்டன்)

சமாதானப் பேச்சுவார்த்தைக்கான திகதியைக் குறிப்பதற்கு அரசாங்கம் தயாராகவுள்ளது. ஆனால் விடுதலைப்புலிகள் தரப்பில் தான் ஏதோ தாமதம் நிலவுகிறது.

இவ்வாறு பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் நேற்றுமுன்தினம் இரவு பி.பி. சிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து பேட்டியளிக்கையில்;

விடுதலைப்புலிகள் அனைத்து விடயங்கள் பற்றியும் உறுதியுடன் இருப்பதற்கு எண்ணுகிறார்கள. பேச்சுவார்த்தைக்கான திகதிகுறிப்பதில் ஏற்பட்டுள்ள தாமதம்ஒருவேளை பேச்சுவார்த்தைகளில் தங்களது தரப்பில்யார் பிரதிநிதித்துவம் செய்வது, பேச்சுவார்த்தைக்கு விடுதலைப்புலிகளின் தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கத்தை எவ்வாறு அனுப்புவது என்பது போன்றவையாகக்கூட தாமதத்திற்கு காரணமாக இருக்கலாம்.

போர்நிறுத்தஉடன்படிக்கை முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதற்காகஅவர்கள் காத்திருக்கலாமெனவும்எண்ணுகிறேன்

அமெரிக்க நிர்வாகத்துக்கு, இலங்கையின் சமாதான முயற்சிகளில் என்ன நடைபெறுகின்றனஎன்பது குறித்து அமெரிக்க நிர்வாகத்துக்கு விளக்குவதாகத்தான் பிரதமர் ரணில் அமெரிக்க அதிபர் சந்திப்பு இருக்கும்.

மிகப்பெரிய அளவில் தாக்கத்தைஏற்படுத்தும் அளவுக்கு அமெரிக்கா உதவி இருக்கும் என்று நம்புவதற்கில்லை.

பொருளாதார ரீதியிலேயே உதவிகள் இருக்கும். இது குறித்து தமிழ் மக்கள்அச்சப்படத் தேவையில்லை என்றும் அவர் மேலும் கூறினார். (த)

## பாகிஸ்தான் பிரதமர் இந்திய வான் பரப்பூடாக பயணம் செய்யமாட்டார்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் ஜனாதிபதி பெர்வேஷ் முஷாரப் இம்மாத இறுதியில் பங்களாதேஷ்செல்லும்போது இந்திய வான் பரப்பின் ஊடாக பயணம் செய்ய மாட்டார் எனபாகிஸ்தான் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பாகிஸ்தான் விமானங்கள் இந்திய வான்பரப்பினூடாக பறப்பதற்கான தடையை சென்ற மாதங்களில் இந்தியா நீக்கியது தெரிந்ததே.

இவ்வாறான தொரு நிலையில் முஷாரப் ஏன் இந்திய வான் பரப்பு ஊடாகபயணம் செய்யமாட்டார் என்பது குறித்து காரணம் இன்னமும் தெரியவரவில்லை.

பங்களாதேஷ் செல்லவுள்ள பிரதமர் சீனா ஊடாக அங்கு செல்லலாம் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-8)

## இஸ்ரேல் வான் தாக்குதல் ஐ.நா. பாதுகாப்பு சபை கவனம் செலுத்தவேண்டும்

(ரெவ்அவில்)

பலஸ்தீன காஸா பகுதியில் இஸ்ரேலியர்கள் அண்மையில் மேற்கொண்ட வான் தாக்குதல்கள் குறித்து ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை கவனம் செலுத்த வேண்டும் என்று அரபுலீக் வேண்டு கோள் விடுத்துள்ளது.

பலஸ்தீனப் பகுதிகளைஆக்கிரமித்துள்ள இஸ்ரேலிய இராணுவத்தை வாபஸ்பெறுவதற்கு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடபட வேண்டும் எனவும் பாதுகாப்பு சபையிடம் அரபுலீக் மேலும் வலியுறுத்தி உள்ளது.

இஸ்ரேலின் தாக்குதலின் போது ஹமாஸ் இயக்கத் தலைவர் உட்பட 14 பேர் உயிரிழந்துள்ளதுடன் 145க்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

## இராணுவப்பிரிவுத் தலைவர் கொலை

# இஸ்ரேலியரைப் பழிக்குபழி வாங்க ஹமாஸ் இயக்கம் தயாராகிறது

(ரெல்அவிவ்)

ஹமாஸ் இயக்கத்தின் இராணுவப்பிரிவு தலைவர் கொல் தாக்குதலின் போது ஹமாஸ் இயக்க இராணுவப் பிரிவுத் தலைவர் உட்பட 14 இந்த தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்துள்ளன.

இதேவேளை. தமது மக்

## நேபாளத்தில் பலத்த மழை 100 பேர் உயிரிழப்பு

(புதுடில்லி)

நேபாளத்தில் கடந்தமூன்று நாட்களாகப் பெய்யும்பலத்த மழையினால் ஏற்பட்ட வெள்ளப்பொருக்கு மற்றும் மண் சரிவினால் 100 பேர் உயிரிழந்துள்ளனர். 50பேர் காணாமற்போயுள்ளனர்.

பல நகதிளில் நீர் பெருக்கெடுத்துள்ளதால் பல பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அஸாம் மாநிலத்தில் பிரமபுத்திரா ஆற்றில் பெருகிப் பாயும் வெள்ளத்தினால் உலகப் புகழ்பெற்ற காசிரங்கா

(ரெல்அவிவ்)

ஹமாஸ் இயக்கத்தின் இராணுவப்பிரிவு தலைவர் கொல்லப்பட்டதை தொடர்ந்து, இஸ்ரேலியர்களைபழிக்கு பழி வாங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதாக ஹமாஸ் இயக்கம் சூளுரைத்துள்ளது.

கடந்த செவ்வாயன்றுஇஸ்ரேலிய விமானப்படை நடத்திய தாக்குதலின் போது ஹமாஸ் இயக்க இராணுவப் பிரிவுத் தலைவர் உட்பட 14 பேர் கொல்லப்பட்டதுடன் 145 பேர்படுகாயமடைந்தமை தெரிந்ததே.

அமெரிக்கா மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனான் ஐரோப்பிய ஒன்றியம் உட்பட பல உலக நாடுகள் இந்த தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்துள்ளன.

இதேவேளை, தமது மக்களை பாரிய குண்டுத்தாக்குதல்களில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், கடந்த இரண்டுவருடங்களாக நடை பெற்றுவந்த குண்டுத் தாக்குதல்களுக்கு இலக்காகி இஸ்ரேலியர்கள் பலர் உயிரிழப்பதற்கு கொல்லப்பட்ட இராணுவப் பிரிவுத் தலைவரான ஷேக்சலாக் ஷெஹாதரவே காரணகர்த்தாவாக இருந்தார் எனவும் இஸ்ரேல் தனது செயலை நியாயப்படுத்தியுள்ளது.

இவர் கொல்லப்பட்ட அடுத்த 72 மணிநேரத்துக்குள் பாரிய குண்டுத் தாக்குதலை நடத்த திட்டமிட்டிருந்தார் எனவும் இஸ்ரேல் குற்றம் சாட்டி செய்தி வெளியிட்டுள்ளது. (உ-8)

# பாகிஸ்தான் விமான ஓட்டுநராக பெண்

பாகிஸ்தானில் விமான ஓட்டுநராக நதிஆபாஹீன் என்ற பெண் நியமிக்கப்பட்டுள்ளார். பாகிஸ்தான் வரலாற்றில் பெண் விமான ஓட்டுநராக நியமிக்கப்பட்டிருப்பது இதுவே முதல் தடவையாகும்.

மேலும் 50 பெண்கள் விமானம் ஓட்டும் பயிற்சிக்காக நியமிக்கப்படவுள்ளனர் என்றும் தெரியவந்துள்ளது. (உ-3)

# காளை அடக்கும் போட்டிக்கு எதிர்ப்பு

(லண்டன்)

காளையை அடக்கும் போட்டிக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஸ்பெயின் நாட்டில் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

ஸ்பெயினிலுள்ள மிருக நலன் இயக்கத்தினர் இப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர்

ஐரோப்பா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளிலிருந்து சென்றவர்களும் இந்த போராட்டத்தில் இணைந்துள்ளனர்.

இதனால் அடுத்த வருடம் இப் போட்டி நடைபெறுமா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, காளை அடக்கும் போட்டியில் ஸ்பெயின் பெயர்பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-3)

சரிவினால் 100பேர் உயிரிழந்துள்ளனர். 50பேர் காணாமற்போயுள்ளனர்.

இதேவேளை இந்தியாவின் அஸாம், பீஹார், மற்றும் வங்காளத்தின் வடபகுதியில் புத்திரா ஆற்றில் பெருகிப் பாயும் வெள்ளத்தினால் உலகப் புகழ்பெற்ற காசிரங்கா தேசியப் பூங்காவின் பெரும் பகுதி நீரில் மூழ்கியுள்ளது. (ஷ)

# உண்ணாவிரதப் போரை மட்டு. சிறைக் கைதிகள் தற்காலிகமாக கைவிட்டனர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புசிறைச்சாலையில் கடந்த செவ்வாய் முதல் உண்ணாவிரதம்இருந்து வந்த தமிழ் அரசியல் கைதிகள் 28 பேரும் நேற்று தமது உண்ணாவிரதத்தைத் தற்காலிகமாகக் கைவிட்டுள்ளனர்.

அமைச்சர் பி.சந்திரசேகரன் நேற்று சம்பந்தப்பட்ட இடத்திற்குச் சென்று உண்ணாவிரதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி கைதிகளின் கோரிக்கைக்குமிகவிரைவில் நடவடிக்கை எடுப்பதாக உத்தரவாதமளித்தார்.

இதனையடுத்து தற்காலிகமாக உண்ணாவிரதத்தைக் கைவிட்ட கைதிகள், ஒருவாரகாலஅவகாசத்துள்சாதகமான முடிவு கிடைக்காத விடத்து தமது போராட்டம்தொடரும் எனத் தெரிவித்துள்ளனர்.

நேற்றையதினம் அமைச்சருடன் யோசப் பரராஜசிங்கமும் மட்டக்களப்பு சிறைச்சாலைக்குச் சென்றிருந்தார்.

இதேவேளை, 5 தினங்களாக விடுதலை கோரி களுத்துறைச் சிறைச்சாலையில்உண்ணாவிரதம் இருந்துவந்த 29 தமிழ் அரசியல் கைதிகளும் நேற்று முன்தினம் முதல் அமைச்சர் பெ சந்திரசேகரனின் உறுதிமொழியை அடுத்து உண்ணாவிரதத்தைக் கைவிட்டமை தெரிந்ததே. (உ)

# சீனாவில் மண் சரிவு 10 பேர் உயிரிழப்பு

சீனாவின் வட மேற்கு பிரதேசமான உரும்சியாவில் ஏற்பட்ட மண்சரிவினால் 10 பேர் பலியாகியுள்ளனர்.

சீனாவில் இருநாட்களாக தொடர்ந்து பெய்து வரும் மழையினை தொடர்ந்தே நேற்று முன்தினம் இந்த மண் சரிவு ஏற்பட்டுள்ளது.

வெள்ளப் பெருக்குக் காரணமாக சீனாவின் 17 ஆயிரத்து 500 பொது மக்கள் வீடுகளை இழந்துள்ளதுடன், சுமார் 4 இலட்சத்துக்கு அதிகமானோர் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர். (உ-8)

மனத்தது மாசாக மாண்டார் நீராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர்.

குறள்

# வலம்புரி

## வெளிவரும் புட்டுக்கட்டு

ஜனாதிபதிக்கும் ஆளும் ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்குமிடையே ஏற்பட்ட முறுகல் நிலையால் இருதரப்பு ஊழல்கள் மற்றும் குளறுபடிகள் மடை திறந்த வெள்ளம் போல் வெளிப்படத் தொடங்கியுள்ளது.


ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் கைப்பையில் அமைச்சர்ரவி கருணாநாயக்க கைவைத்ததன் மூலம் எமது நாட்டு அரசியல் தலைவர்களின் புட்டுக்கட்டுக்கள் வெளிப்படுவது எதிர்காலத் தேர்தல்களில் மக்கள் முடிவெடுப்பதற்கு உதவியாக அமையும்.

'உறவு உறவாக இருந்தாலும் பறியில் கை போடாதே' என்ற தமிழ் பழமொழியின் உண்மைத் தத்துவம் இப்போது விளங்குகிறது. ஜனாதிபதியின் கைப்பையில் தெரிந்தோ தெரியாமலோ அமைச்சர் ரவி கருணாநாயக்க கைவைக்கப் போய் இலங்கையின் அரசியல் வரலாற்றில் இல்லாதவாறு பாராளுமன்றத்தில் உறுப்பினர்கள் அடிதடிப்பட்டது வரை நிலைமை முற்றிப் போய்விட்டது.ஒருகாலத்தில் இலங்கைப் பாராளுமன்றத்தில் அங்கம் வகித்தவர்கள் ஆகக் குறைந்தது சட்டத்தரணிகளாக இருந்தார்கள். இப்போது அப்படியல்ல. எதற்கெடுத்தாலும் கை வைக்கும் கூட்டமே பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்றது. அப்படியானால் பாராளுமன்றத்தில் அடிதடி நடக்காமல் வேறென்ன நடக்க முடியும்?

நம் நாட்டுப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் அடிபட்டுவிட்டு பாடசாலை மாணவர்களைப் பார்த்து மாணவர்களை சமாதானமாக இருக்கும்படி கூற முடியுமா?

பாராளுமன்றத்தில் சபை உறுப்பினர்கள் எப்படி நடந்துகொண்டிருக்கிறார்களோ அதே போன்றுதான் இளஞ் சந்ததியும் தம்மை வழிப்படுத்தப் போகின்றது. நாடு யுத்தத்தால் எரிந்து கொண்டிருக்கும் போது கைப்பை வாங்குவதிலும், அமைச்சின் நிதியை மோசடி செய்வதிலும் ஆட்சியாளர்கள் ஈடுபட்டால் மக்கள் நிம்மதியை இழந்து இழப்புகளுக்கு ஆளாகுவார்களே தவிர வேறு எதுவும் நடக்கப் போவதில்லை.

# சிவபுராணத்தில் சிவனின் அநாதித் தன்மையை விதந்தோதி விளக்குகின்றார் மணிவாசகர்



## வெள்ளி நற்சிந்தனை

ஞான நெறியாளரான மாணிக்கவாசகரின் தெய்வீக அனுபவங்கள் திருவாசகமாக தேனினைப் போலவும் ஊனினை உருக்குவதாகவும் வெளிவந்தன. இதனாற்றான் ''திருவாசகத்திற்கு உருகாதார்ஒருவாசத்திற்கும் உருகார்'' என்று கூறுவர். இத்தகைய திருவாசகத்தின் ஒரு பகுதியாக அமைந்துள்ள தேசிவபுராணமாகும். இதில் சிவனது அநாதித்தன்மை விதந்தோதப்படுகின்றது.

பசுபாசங்களுக்கு தலைவர் ஆதலால் பதியென்று போற்றப்படும். இறைவனுக்குசைவசித்தாந்தம் இரு நிலைகளைக் காட்டுகின்றது. அவையாவன மனம் வாக்கிற்கு எட்டாதவன் என்ற நோக்கிலே சொரூப நிலையிலுள்ளவனாகவும்உலகு உயிர் சார்பிலே தடத்த நிலையில் உள்ளவனாகவும் போற்றப்படுகின்றான். இவ்வகையில் சிவ புராணத்தில் கூறப்பட்டுள்ள சிவனைப் பற்றி சிறிது நோக்குவோம்.

### இறைவனின் இயல்பு

ஆன்மாக்களின் மலபந்தங்களை அகற்றும் இறைவன் மலமற்றவன் ஆவான். இவ்வகையில் மலங்களால் பீடிக்கப்படாத இறைதன்மையைச் சுட்டியே ''நிமலன்'' ''விமலன்'' என்று போற்றப்படுவதைக் காணலாம். இந்நிலையில் இறைவன் மாயப் பிறப்பை அறுப்பவனாகவும், பிறப்பறுக்கும் பிஞ்ஞகனாகவும் விதந்து பாடப்படுகின்றான்.

சிவபுராணத்திலே''விடைப்பாகா'' என்ற பதமானது இறைவன் எருதின் மேல் வருவதாக கூறப்பட்டிருப்பினும் தூயவெள்ளை எருதானது மலமற்ற உயிர்களைச் சுட்டுவதாக இருக்கிறது. இவ்வகையில் உயிர்களுக்கு எல்லாம் தலைவன் அவற்றோடு ஒன்றாய் இருப்பதைச் சுட்டும் முகமாக ''விடைப்பாகா'' என்று கூறியிருப்பதை நோக்க முடியும். இக்கருத்திலேயே இருக்கு வேதமும் இறைவனைப் ''பிரஜாபதி'' என்று கூறுகின்றது.

பிறப்பு, இறப்பு அற்றவன் இறைவன் என்பதை ''போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியன்'' என்னும் பாடலடி சுட்டுகின்றது. பிறப்பு, இறப்பு என்ற நிலையைக் கடந்து என்றும் உள்ளவன்

**க. சிவகுமார்,**
சுன்னாகம்.

இறைவன் என்பது இங்கே தெளிவாகக் கூறப்பட்டிருப்பதைக் காணலாம். அதாவது உலகின் தோற்றத்தையும் ஒடுக்கத்தையும் ஏற்படுத்த தோற்றமும் ஒடுக்கமும் அற்ற ஒருவராலேயே முடியும், அத்தகைய ஒருவரே இறைவன் என்பதை மேற்படி பாடல்வரி விளக்குகின்றது.

இறைவன்பலவாறுதோற்றம் எடுத்தாலும் ஒருவனே என்பதை ''ஏகன் அனேகன்'' என்றபதம் விளக்குவதாயுள்ளது. அதாவது இறைவன் ஒருவனாயிருந்தபடியே பல உருவங்களை உடையவனாக காட்சியளிக்கின்றான்,இவ்வாறாக ஆன்மாக்களை ஈடேற்றும் பொருட்டு அவை நினைக்கும் பல உருவங்களை எடுப்பானாயினும் அதனால் தன்னியல்பு சிறிதும் மாற்றமுறாது ஒருவனாகவேஇருக்கின்றான். இக்கருத்தையே சிவஞானசித்தியார் ''யாதொரு தெய்வம்கொண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே மாதொருபாகனார் தாம் வருவர்'' என்று கூறுகின்றது. இருக்கு வேதமோ '' உள்ள பொருள் ஒன்றே'' என்று உறுதிபட உரைக்கின்றது. இவ்வகையில் ஆன்மாக்களை உய்விக்கும் பொருட்டு பல வேடங்களைத்தாங்கி இறைவன் ஆட்கொண்டாலும் அவன் ஒருவனே என்பது இங்கே தெளிவுபடுத்தப்படுவதைக் காணலாம்.

### வியாபகத் தன்மை

இறைவன்எங்கும் வியாபித்துள்ளமையால் சர்வவியாபகி என்று சுட்டப்படுகிறான், இறைவனின் வியாபகத்தன்மையை '' விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய்'' என்ற பாடலடி விளக்குகின்றது. அதாவது இறைவன் விண்ணுலகிலும் மண்ணுலகிலும் இரண்டறக்கலந்து அதற்கு அப்பாலும் வியாபித்துள்ள தன்மை இங்கேஉறுதிப்படுத்தப்படுவதை காணமுடிகின்றது.

ஐம்பூதங்களிலும் இறைவன கலந்துசெறிந்துள்ளான் என்பதை ''நிறங்களோர் ஐந்துடையாய்'' என்ற பாடலடியில் சிறப்பாக கூறப்படுகிறது. அதாவது நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்பவற்றில் இறைவன் இரண்டறக்கலந்து சர்வவியாபகியாகி நிற்கும் தன்மையையும் அதனால் அவற்றின் நிறங்களான பொன்மை, வெண்மை, செம்மை,கருமை, புகைமை என்பவற்றை தமக்குரியதாக கொண்டவராக விளங்குவதையும் எடுத்தியம்புவதாக இப்பாடலடி அமைகின்றது.

### ஐந்தொழில் தத்துவம்

கருணைக்கடலான இறைவன் ஆன்மாக்களை உய்விக்கும் பொருட்டு ஐந்தொழில்களைப் புரிகின்றான் இவை படைத்தல்,காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என்பனவாம். 'ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்' என்ற பாடலடியில் இறைவன்நிகழ்த்தும் ஐந்தொழில்களில் நான்கு சிறப்பிக்கப்படுகின்றது. ஆயினும் இவற்றிற்கு இடையே நிகழும் மறைத்தல் தொழில் உய்த்துணருமாறு விடப்பட்டுள்ளது. இவ்வகையில் ஐந்தொழில்களை இயற்றும் தன்மையில் இறைவன் பதியெனச் சிறப்பிக்கப்படுகின்றான்.

இவ்வாறாக மாணிக்கவாசகரதுசிவபுராணத்தில் சிவனைப்பற்றிக் கூறியவை எண்ணிறைந்தவை.அவை சிவபுராணத்தில் மட்டுமல்லதிருவாசகமெங்கும் செறிந்துள்ளன. திருவாசகத்தின் பொருள் சிதம்பர நடராசனே. என்பதை மாணிக்கவாசகர் உறுதிபடக் கூறியுள்ளார் இத்தகைய சொல் அழகும், பொருள் அழகும் மிக்கதிருவாசகப் பாடல்களை நவிலும் போது பக்தியுணர்வு மேலோங்கி பரவசம்அடையச் செய்யும் என்பது அனுபவ வெளிப்பாடாகும். திருவாசகத் தேனைப்பருகி திருவருள் பெற்றுய்வோம். ✶

## தினசரி தியானம்

### பேரியல்பு

விறகில் தீயினன் பாலிற்படு நெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவுகோல் நட்டுணர்வு கயிற்றினால்
முறுகவாங்கிக் கடையமுன் நிற்குமே.

அப்பர்.

பெம்மானே, உன்னைப் போற்றுதலும் எனது பேரியல்பைப் பெறுதலும் ஒன்றேயாம்.

தூய உள்ளம், நேரானஎண்ணம் நல்வினை ஆகிய இவையாவும் மனிதனது பேரியல்பைப் பெருக்குதற்கென்று அமைந்தவைகளாம். அதிகமான ஆற்றலும், பெருநன்மையும், தெவிட்டாத இன்பமும் உண்டாவது மனபரிபாகத்தினின்றேயாம். பெருமுயற்சி, ஆழ்ந்த எண்ணம், தெய்வீகப்பற்று ஆகிய இவைகளின் மூலமாகவே மேலோர் எக்காலத்திலும் தங்களது மேலான இயல்பை வளர்க்கலாயினர். சிற்றியல்புடைய மனிதன் மனபரிபாகத்தால் பேரியல்புடைய மனிதனாகமாறியமைகிறான்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

## டேவிற் வீதியைத் திருத்த உடன் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யுத்த அனர்த்தங்களின் காரணமாகநீண்டகாலமாகத் திருத்தப்படாதிருந்த குருநகர் டேவிற் வீதி மற்றும் நாவலர் வீதி, என்பன உடனடியாக புனரமைப்புச் செய்யப்பட இருப்பதாக யாழ். மாநகர மேயர் செ.கந்தையன் தெரிவித்தார்.

வீதி புனரமைப்புக்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதை அடுத்து இவ் வேலைகள் அடுத்த மாதமளவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும், இவ் வீதிகள் திருத்தப்படாமையினால் மக்கள் எதிர்கொண்ட சிரமங்களுக்காகத் தான் மனம் வருந்துவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதே வேளை, டேவிற் வீதி திருத்தப்படாமையைக் கண்டித்து போக்குவரத்துக்குப் பயன்படாத வீதி பயிர்ச் செய்கைக்காவது பயன்படட்டும் என்ற நோக்கில் அப்பகுதி மக்கள் வீதியில் வாழைமரங்களை நாட்டியமையும் குறிப்பிடத்தக்கது, (ஷ-6)

## தனியார் பஸ் கட்டணம் ஒகஸ்ட் முதல் குறையும்

(கொழும்பு)

எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் தொடக்கம் தனியார் பஸ் கட்டணங்கள் யாவும் குறைக்கட்படும் என தனியார்பஸ் உரிமையாளர்கள் சங்கத் தலைவர் கெமுனு விஜயரட்ண தெரிவித்துளளார்.

கடந்தவாரம் தொடக்கம் டீசல்,பெற்றோல் போன்ற எரிபொருள்களின் விலையை அரசு குறைத்துள்ளதையடுத்தே இந்தஅறிவிப்புவெளியாகியுள்ளது.

இதற்கமைய 2·7 தொடக்கம் 5வீதம் வரையிலான தொகை அடுத்த மாதம்முதல் குறைக்கப்படவுள்ளது. (உ-8)

## பிணை வழங்கும் சட்டத்தில் விரைவில் திருத்தம்

பிணைவழங்குவது தொடர்பாக தற்போது அமுலில் இருந்து வரும் சட்டத்தில் மாற்றங்கள் கொண்டுவரப் படவுள்ளதாக நீதியமைச்சர் வி.ஐ.மு. லொக்கு பண்டார தெரிவித்துள்ளார்.

தற்போது சட்டவிதிகளில் உள்ள குறைபாடுகளை கைத்தொழில் அமைச்சர் ரோகித போகல்லாகம பாராளு மன்ற உறுப்பினர் டி.டி. டபிள்யூ விக்கிரம ரட்ண நீதி சம்பந்தமான பாராளுமன்றக் குழுவிடம்சுட்டிக்காட்டிய பின்னர் லொக்குபண்டார இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நீதிமன்றங்களில் பிணைப் பணங்களாகசெலுத்தப்பட்ட பணத்தை மீளப் பெற்றுக் கொள்வதிலும் தாமதம் ஏற்படுகிறது என தெரியவந்துள்ளது.

இவ்வாறான பிரச்சினைகளைத் தீர்ப்பதுதொடர்பாக கொள்கைதிட்டமிடல் திட்ட அமுலாக்கல் அமைச்சரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்காவுடன்பேச்சு வார்த்தை நடத்தப் போவதாகவும் அமைச்சர்தெரிவித்துள்ளார். (உ-7)

# இலங்கையின் சமாதான முயற்சிக்கு அமெரிக்கா பூரண ஆதரவு வழங்கும்!

## ஜனாதிபதி புஷ் பிரதமரிடம் உறுதி

(வாஷிங்டன்)

இலங்கை அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளுக்கு பூரண ஆதரவு வழங்கத தயாராக இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ச் டபிள்யு புஷ் உறுதியளித்துள்ளார்.

அமெரிக்காவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமெரிக்க ஜனாதிபதி புஷ்சை நேற்று முன்தினம் வெள்ளை மாளிகையில் சந்தித்துப் பேசினார்.

இச் சந்திப்பின் போதே ஜனாதிபதி புஷ் மேற்கண்டவாறு உறுதியளித்தார்.

புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு அமைவாக விடுதலைப்புலிகளுடன் மேற்கொண்டுள்ள சமாதான முயற்சிகள் குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா ஜனாதிபதி புஷ்ஷுக்கு விளக்கிக் கூறினார்.

அத்துடன் இலங்கைக்கான அமெரிக்க உதவிகளின் முக்கியத்துவம், இருதரப்பு வர்த்தக ஒப்பந்தம் மற்றும் இரு நாடுகளினதும் உறவுப்பாலம் குறித்தும் இரு தலைவர்களும் கலந்துரையாடினர்.

இலங்கையில் இரு தசாப்தங்களிற்கு மேலாகத் தொடர்ந்து வரும் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து சமாதானத்தை ஏற்படுத்த இலங்கை அரசு முன்னெடுக்கும் அரசியல் நடவடிக்கைகளுக்கு அனைத்து உதவிகளையும் அமெரிக்கா வழங்கும் என்றும் ஜனாதிபதி புஷ் உறுதியளித்துள்ளார். (உ-8)

### ஜனாதிபதி...

யில் அமைச்சர் ரவி கருணாநாயக்க தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா பல குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ளார்.

ஜனாதிபதியின் இக் குற்றச்சாட்டுகளுக்குப் பதில் அளிக்கும் வகையிலேயே அமைச்சர் ரவி கருணாநாயக்க இஸ்லாமபாத்தில் இருந்து மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (ம)

### பாராளுமன்றில்...

கொண்டதாக விசாரணைக்குழு முடிவு செய்யுமாயின் சம்மந்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் மீது கட்சி பேதம் இன்றி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேவேளை இந்த விசாரணைக் கமிட்டியில் பாராளுமன்ற உறுப்பினர்களோ அல்லது அமைச்சர்களோ இடம்பெறமாட்டார்கள் என்றும் அவர் மேலும் கூறினார். (த)

### தமிழ்

டார்கள்

இச்சந்திப்பின் போது, பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழும், சந்தெகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு ஒப்புதல் வாக்கு மூலம் பெறப்பட்ட வர்களை விரைவில் விடுதலை செய்வதற்கு இருசாராலும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

மத்திய வங்கிக் குண்டு வெடிப்பு, மாநகர சபைக் குண்டு வெடிப்பு, தலதா மாளிகைக் குண்டு வெடிப்பு, ஆகியவற்றுடன் தொடர்புடைய சந்தேக நபாகளை விடுதலை செய்வத தொடர்பாக அரசு தீவிரமாக ஆராய்ந்து உடனடியாக நடவடிக்கை எடுக்கும் என்று பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பன தெரிவித்ததுடன் ஏனைய கைதிகளை ஒரு மாத காலத்திற்குள் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு மூவர் கொண்ட குழு ஒன்றை நியமிக்கப் பட்டுள்ளது.

அ.விநாயக மூர்த்தி, ஜி.ஜி.கஜேந்திரகுமார், என்.சிறிக்காந்தா ஆகியோர் கொணட குழு இக் கைதிகளின் விடுதலை தொடர்பாக ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதற்கும் இச்சந்திப் பின் போது இணக்கம் காணப்பட்டுள்ளது.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில்

## இந்தியத் தூதுவருக்கு விருந்துபசாரம்

(கொழும்பு)

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபாலகிருஷ்ணகாந்திக்கு தமிழ் கட்சிக் கூட்டமைப்பினர் இன்று விருந்துபசாரம் வழங்கிக் கௌரவிக்கவுள்ளனர்.

தூதுவர் காந்தி இலங்கைக்கான தூதுவர் பதவியிலிருந்து இடமாற்றம் பெற்று செல்வதை முன்னிட்டே இவ் விருந்துபசாரத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இன்றைய நிகழ்வில் வைத்து தமிழ்க்கட்சி கூட்டமைப்பினர் ம.தி.மு.க செயலர் வை.கோபாலசாமியை விடுதலை செய்யுமாறு கோரும் மகஜர் ஒன்றினையும் தூதுவரிடம் கையளிக்கவுள்ளனர். (இ)

## மருதானையில் சடலம் மீட்பு

(கொழும்பு)

மருதானையில் உள்ள வீடொன்றில் வெட்டுக்காயங்களுடன் ஒருவர் சடல்மாக மீட்கப்பட்டுள்ளார்.

மருதானையில் உள்ள வீட்டின் பூட்டிய அறையொன்றிலிருந்தே இச் சடலம் மீட்கப்பட்டுள்ளது. இது தொடர்பான புலன் விசாரணைகளை மருதானைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ம)

## ஆடிவேல் பவனிக்கு நகரில் வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ பால கதிர்காம தேவஸ்தான ஆடிவேல் இரதபவனி இன்று பிற்பகல் 1.00 மணிக்கு யாழ் நகரில் இடம் பெறவுள்ளதால் கலாசார ஒழுங்கிற்கு இணங்க வீதியை மகர தோரணங்களால் அலங்கரித்து பூரண கும்பம் வைத்து பவனியை வரவேற்குமாறு யாழ்ப்பாணம் வணிகர் கழகம் கேட்டுள்ளது. (ஷ)

## யாழ் இந்துவில் விஞ்ஞான தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ் இந்துக் கல்லூரியின் விஞ்ஞான தினமும் மலர் வெளியீடும் இன்று காலை 9.30 மணிக்கு கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் சு.கௌசிகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் ஓய்வுபெற்ற விரிவுரையாளர் சண்முகசுந்தரம் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

நூல் ஆய்வுரையை யாழ் மத்திய கல்லூரி பிரதி அதிபர் ரி.நாகரத்தினம் நிகழ்த்துவார். (த)

## மாணவர் விபரத்தை ஒப்படைக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வேறு மாவட்ட பாடசாலைகளில் 5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கு விண்ணப்பித்துவிட்டு தற்பொழுது யாழ்குடா நாட்டு பாடசாலைகளில் கல்வி கற்கின்ற 5ம் ஆண்டு மாணவர்களின் விபரங்களை பாடசாலை அதிபர்கள் இன்று காலை 10.00 மணிக்கு முன்பதாக யாழ் வலயக் கல்விப் பணிமனையில் ஒப்படைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் அறிவித்துள்ளார். (இ-19)

## கோம்பயன் மணல் இந்து மயான பரிபாலன சபை பொதுச் சபைக் கூட்டம்

மேற்படி சபையின் பொதுச் சபைக் கூட்டம் 11.08.2002, ஞாயிறு

# இலங்கை இனப்பிரச்சினை தீர்வுக்கு இந்தியா பூரண ஆதரவு வழங்கும்

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இந்தியா தனது பூரண ஆதரவை வழங்கும் என்று இந்தியத் தூதுவர் சிறி நிருபம் சென் நேற்று வர்த்தக சமூகத்தினரிடம் தெரிவித்துள்ளார்.

இந்தியத் தூதுவர் சிறி நிருபம் சென்னனை வர்த்தக சமூகத்தினர் நேற்று சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தனர். இப்பேச்சுவார்த்தையின்போது இந்தியத்தூதுவர் மேலும் தெரிவிக்கையில்.

இலங்கையின் இனப்பிரச்சினையின தீர்வுக்கு தற்போதைய அரசு மேற்கொண்டுவரும் சமாதான முயற்சிக்கு பூரண ஒத்துழைப்பு வழங்க இந்தியா தயாராகவுள்ளது. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் அமைக்கப்படவிருக்கும் பாலம் வரவேற்கத்தக்கது. இது இலங்கை இந்திய வர்த்தகத் தொடர்பை மேம்படுத்தும் என்றும் இந்தியத் தூதுவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

### கடற்றொழிலுக்குச்...

யடுத்து, கடற்றொழில் நீரியல் வளத் துறை அமைச்சு, மீனவர்களை உறுதிப்படுத்தும் அடையாள அட்டைகளை வழங்கி வருகின்றது.

இதனால் இவ் அடையாள அட்டை வைத்ருப்பவர்களையே மீன் பிடிக்க அனுமதிப்பதென்று படையினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை மீனவர் அடையாள அட்டை பெற்றுக் கொள்வதற்காக, கடற்றொழிலாளர்கள் மீனவா் சங்கங்களுக்கு சென்று, தமது விபரங்களை சமர்ப்பித்து வருகின்றனா.

மீனவர்கள் தேசிய அட்டையுடன் தமது பகுதி கிராம சேவையாளரின் சிபார்சுக் கடிதத்தைப் பெற்று மீனவர் அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்க முடியும் என்று மீனவர் சங்கங்கள் தெரிவித் துள்ளன.(இ-6)

### சபாநாயகருக்கு

ணியில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகள் ஆராய்ந்து வருகின்றன.

இவ்விடயம் குறித்து பொது ஜன ஐக்கிய முன்னணிக் கட்சித் தலைவர்கள் நேற்று முன்தினம் கூடி ஆராய்ந்துள்ளன. (இ)

### அமைச்சர்...

இவ்விடயம் குறித்தே பேச வருமாறு ஜனாதிபதி அமைச்சருக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

கொழும்புக்கு தான் வெளியே நிற்பதால் கொழும்புக்கு வரும் போது சந்திப்பதாக அமைச்சர் இம்தியாஸ் ஜனாதிபதிக்கு பதிலளித்துள்ளார்.

இதேவேளை ஜனாதிபதியின் பொலநறுவைக் கூட்டத்துக்கு செய்தியாளர்கள் எவரும் அனுமதிக்கப்படவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

### புலிகள்...

முகமாலைச் சோதனைச் சாவடியில் இருந்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் சுமார் 150 மீற்றர் தூரம் சென்ற போதே இந்தத் துர்ப்பாக்கியச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும், சர்வதேச கண்காணிப்புக் குழு தனது அறிக்கையில் வெளிப்படுத்தியுள்ளது. (ம)

### கூட்டமைப்பு...

யின தற்போதைய நிலை தொடர்பாகவும் அதன் அமுலாக்கல் தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் தலைவர் பிரபாவைச் சந்திப்பது இது இரண்டாவது தடவை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)

## வை.கோவின் கைதை எதிர்த்து இன்று கண்டனக் கூட்டம்

### ஆசிரியர் சங்கம் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோபாலசாமியை தமிழக அரசு கைது செய்து சிறையில் அடைத்துள்ளமை யைக் கண்டித்து இலங்கைத் தமிழர ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு கண்டனக் கூட்டமொன்று நடைபெறவுள்ளது.

கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மண்டபத்தில் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொது செயலாளர் த.பஞ்சலிங்கம், யாழ் மாவட்டச் செயலாளர் க.குமாரசாமி ஆகியோர் உரையாற்றுவர்.

இக் கூட்டத்திற்கு யாழ் மாவட்ட சகல கிளை-நிர்வாகசபை உறுப்பினர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஆசிரிய மாணவர்கள்,

## கோம்பயன் மணல் இந்து மயான பரிபாலன சபை பொதுச் சபைக் கூட்டம்

மேற்படி சபையின் பொதுச் சபைக் கூட்டம் 11.08.2002, ஞாயிறு காலை 10.00 மணிக்கு மயான மண்டபத்தில் நிகழும். அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமுகந் தருமாறு அழைக்கின்றோம். புதிதாக சேரவிரும்புவோர், விண்ணப்பப் படிவத்தை பெற்றுச் சேர்ந்து கொள்ளலாம். இக் கூட்டத்தில் புதிய நடப்பு வருட நிர்வாகசபை தெரிவு செய்யப்படும்.

75/10A, பிறவுண் வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம். [5735]

கலாநிதி க.குணராசா
தலைவர்


இச்சந்திப் பின் போது இணக்கம் காணப்பட்டுள்ளது.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு உடன் படிக்கைக்குப்பின் 454 தமிழ் அரசியல் கைதிகள் பல்வேறு சிறைகளில் இருந்து விடுதலை செய்யப்பட்டுள்ள தாகவும் பாதுகாப்பு அமைசத் தரப்பில் தெரிவிக்கப் பட்டுள்ள துடன், ஏனைய அரசியல் கைதிகளையும் விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப் படும் என்றும் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.

இதேவேளை தற்போது நாட்டில் உள்ள சுமார் பத்துச் சிறைச் சாலைகளிலும் 394 தமிழ் அரசியல் கைதிகளை எதுவித விசாரணையுமின்றி நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்டபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப் படுகின்றது.

(வ)

கண்டனக் கூட்டமொன்று நடை பெறவுள்ளது.

கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மண்டபத்தில் சங்கத்தின் யாழ் மாவட்டத் தலைவர் வ.கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ள இக் கண்டனக் கூட்டத்தில் யாழ் பல்கலைக்கழக பட்டப்பின் படிப்பு பிரிவின் பீடாதிபதி

னர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஆசிரிய மாணவர்கள், மற்றும் மனிதநேய அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம் கேட்டுள்ளார்.

(இ)


IPAS
## Institute of Professional Accounting Studies

- CIMA (U.K)
- CMA (Sri lanka)
- Chartered Accounting
- SLIM
- aat

மேற்படி தொழில்சார் கற்கை நெறிகளுக்கான முன்னோடி ஆங்கில விருத்தி வகுப்புக்கள்

**BUSINESS COMMUNICATION**

Visual Study System இன் மூலம் கற்பிக்கப்படவுள்ளது.

**காலம்: எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (28.07.2002) காலை 10.00 மணி (புதிய நேரம்)**
**இடம்: யாழ்.மத்திய கல்லூரி.**

ஏற்கனவே IPAS இல் மாணவர்களாகப் பதிவு செய்தவர்களும், புதிதாக மாணவர்களாக பதிவு செய்து கொள்ள உள்ளவர்களும் இக் கற்கைநெறிகளில் இணைந்து கொள்ளவும்.

**மேலதிக விபரங்களுக்கு:**
IPAS,
இல10, செம்மணி வீதி,
(கிட்டு பூங்கா முன்பாக)
நல்லூர் [5729]

Course Director
T.P - 021-3548



## பிறந்த நாள் வாழ்த்து

நல்லூர் பருத்தித்துறை வீதியைச் சேர்ந்த திரு.செ.சண்முகராஜா அவர்களின் புத்திரன் ச.நிதர்சன் அவர்கள் தனது பிறந்த தினத்தை இன்று கொண்டாடுகின்றார். அவரை அப்பா, அம்மா, சகோதரர் சகோதரிமார், உற்றார், உறவினர் நண்பர்கள், வாழ்த்துகின்றனர்.

374,பருத்தித்துறை - வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். [C/4757]



## இலவச கணனி பயிற்சி நெறி

**இறுதிப் பிரிவு ஆரம்பம் 27.07.2002 9.30 a.m**

இவ் விண்ணப்பத்தை பூர்த்தி செய்து அல்லது சுயமாக தயாரித்து கீழ் காணும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பவும்.

APPLICATION FORM
Full Name :-....................
Address :-....................
Date of Birth:-....................
Course Detail:-....................
Date. Signature Of Applicant

அலுவலக உத்தியோகஸ்தர்களுக்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்குமான மாலைநேர வகுப்புக்கள் ஆரம்பம் (27.07.2002 6.00 P.m.)

**Diploma in Microsoft Office**
Introduction to Computer
MS Word XP
MS Excel XP
MS Access XP
MS Outlook XP
MS Power point XP
Photo Draw XP

**Diploma in Computer Programming**
Introduction to Computer
MS Windows XP
Programming Techniques
MS Word XP
MS Access XP
Visual Basic
C++
E-Mail & Internet
HTML Programming

**Certificate Course**
MS Word XP
MS Excel XP
MS Access XP
Auto CAD
Visual Basic
Visual FoxPro
Corel Draw

இல.07, பலாலி வீதி, புதிவாளர், யாழ்ப்பாணம்.

**அனைத்து பயிற்சி நெறிகளுக்கும் அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன !**

JAFFNA TECHNICAL INSTITUTE
JAFFNA, SRI LANKA

Head Office
No.11/10B, Stanley Road,
Jaffna.

Branch:
No.07, Palaly Road,
Jaffna.



இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.07.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.